171

# Muhamma

His life ar
career

# முகம்மது
சரித்தி

PART.

...agadisan
...ishers
...ne, M

...ce As.

(ஒ'.3
N22
176903

# மௌலானா முகம்மது

# அலியின் சரித்திரம்

---

முதற்பாகம்

---

விலை அணா 8

K. ஜகதீசன் கம்பெனி

திருவல்லிக்கேணி, சென்னை.

(All Rights Reserved)

Printed at the
(Thiripurasundari & Co.,)
NOBLE PRESS.
*1-21 Khana bagh St.*
*Triplicane, Madras. S. E.*

# *Publishers' Note.*

Owing to the absence in Tamil of a cheap edition of the Life of Muhammad Ali, this book has been published.

Despite differences on various Political View-points there may be; all political workers and Students in the Tamil Country will surely gain much by reading the salient features of the Muhammadan Patriot's life.

The second part dealing with the patriots' Mission to England, work in the cause of Islam, and trial in Karachi will be published very soon.

The present book is the first of a series of cheap editions of the lives of India's Greatest Sons and we hope the generous public will extend their welcome to the same.

இப்புத்தகம் இரண்டாம் பாகம் வேண்டுவோர் இதனடியிற் கையொப்பமும் விலாஸமும் விளங்குமாறு எழுதி யனுப்பினுல் 1921-ம் வருஷம் டிஜம்பர் மாதத்தில் பிரதி ஒன்றுக்கு 8 அணு வீதம் வி. பி. யில் அனுப்பப்படும். ஏனையோர்க்கு விலை அணு 12.

தபால் ஸ்டாம்பு 9 அணுவுக்கு அனுப்பினுல் அனுவசியமான வி. பி. சார்ஜில்லாமல் அனுப்பப்படும்.

K. ஜகதீசன் கம்பெனி,
திருவல்லிக்கேணி.

---

## முகம்மது அலி 2-ம் பாகம்.

ஐயா,

தங்களுடைய பதிப்பான 2-ம் பாகம் பின் விலாஸத்துக்கு வி. பி. யில் அனுப்பவும்.

பெயர்.........................................

விலாஸம்.........................................

ஊர்.........................................

போஸ்டு.........................................



# மௌலானா முகமத் அலியின் சரித்திரம்.

---

## அத்தியாயம். 1

### இவர் பிறப்பும் இளமையும்.

தற்காலம் மகமதிய மதவிஷயமாகவும், கிலாபத் விஷயமாகவும் வேலை செய்து, ஹிந்து மகமதிய ஐக்யத்துக்காக உழைத்து, பொது ஜன காரியத்திலும் இஸ்லாத்தின் மேன்மையைக் கூறுவதிலும் கண்ணுங்கருத்துமாய் இருந்து, இப்பரத கண்டத்தில் அவதரித்த பல பெரிய மஹான்களில் ஒருவரெனப் பலராலும்

கொண்டாடப்படும் மௌலானா முகமத் அலி என்பவர் ராம்பூர் (Rampur) என்னும் ராஜ்யத்தைச் சேர்ந்தவர். ஆதியில் இவரது பெரியோர்கள் மொராடபாட் (Moradabad) என்னும் நகரத்தில் வசித்தவர்கள். இவரது பிதாமகர், கானிஸமான் அலிபக்ஷ்கான் என்பவர் ராம்பூர் ராஜ்யத்தில், யூஸுப் அலி என்னும் நவாபு குமாரரிடம் உத்தியோகம் அமர்ந்தது முதல் முகமத் அலியும் அவர் வம்சத்திலுள்ளவர்களும் ராம்பூர் வாஸிகள் என்று கருதப்படுகிறார்கள்.

முகமத் அலியின் பிதாமகர் சொத்துக்காரர். ராம்பூரில் உத்தியோகத்தில் நல்ல கீர்த்தியுடன் அமர்ந்து, அவ்விராஜ்யத்து நவாப்புகளால் நன்கு மதிக்கப்பட்டார். நவாப்புகளின் ஆப்த மனுஷர் என இவரைப் பற்றி பல ரிக்கார்டுகளிலும் துலக்கப் பட்டிருக்கிறது. ரொஹில் கண்டு, குமவான் (Rohilkhand, Kumaon) பிரதேசங்களில் நவாபின் வகை மனுஷராக இவர் இருந்துவந்து, அக்காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு அரிய உதவிகள் புரிந்திருப்பதாகவும் வெளியாகிறது. கலகக்காரர்களால், நெய்னிட்டால், ஆல்மோரா (Naini Tal, Almora) முதலிய இடங்களில் ஆங்கிலே

யர்கள் அவதிப்படுங்காலத்தில் அவர்களுக்கு வேண்டிய ஸௌகரியங்கள் இவர் செய்தாரென்றும் விளங்குகிறது. இவரது உதவிகளுக்கு விச்வாஸம் வைத்து கைம்மாறு காட்டி, ஆங்கில அரசாங்கத்தார் இவருடைய எஜமானனை நவாபுக்கு கொஞ்சம் தேசம் அளித்தும், முகமத் அலியின் பாட்டனுருக்கு முராடபாட் ஜில்லாவில் ஜாகீரும் விட்டிருக்கிறார்கள்.

பிறகு இவர் குமாரரும் முகமத் அலியின் பிதாவுமான அப்துல் அலிகான் என்பவரும் ராம்பூர் ராஜாங்கத்தின் ராணுவத்தொழில் பெற்று, நவாபுகளின் நல்ல எண்ணத்துக்கு பாத்திரராய் இருந்து வந்தார். "உப்பிட்டவரை உள்ளளவு நினை"ப்பது நற்குணம் வாய்ந்த மானிடரின் இயல்பாயிருத்தல்போல, முகமத் அலியின் குடும்பம் ராம்பூர் நவாபுக்கே ஈடுபட்டு அவ்விராஜ்யமே தங்கள் சொந்த இடமாகவும் அன்புள்ள நாடாகவும் நினைத்துவந்து, முகமத் அலியும் அவர் சகோதாரும் நாளைக்கும் அவ்வாறே நினைத்து வருகிறார்கள்.

இவ்வாருய உத்தியோகத்திலிருந்து மேன்மைப்பட்டுவந்த அப்துல் அலிகான், சென்ற 1880-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் திடீரென காலரா பேதியால்

அவதிப்பட்டு, தனது அருமைக் குழந்தைகள் அறுவ ரும், வெகு இளமையான தனது தர்மபத்னியும், துயர் வுறுமாறு காலகதி யடைந்தார்.

அக்காலம் முகமத் அலிக்கு பிராயம் இரண்டே. சற்றேரக்குறைய ஐந்து ஆண்டுகள் மூதடைந்தவர் ஷௌகத் அலி. இவர்களுக்கு கல்வி புகட்டி போஷிக் கும் கடமையும், ஏனைக் குழந்தைகளை வளர்க்கும் பாரமும், இவர்களின் இளந்தாய்க்கு ஏற்பட்டது.

தந்தையை யிழந்த இக்குழந்தைகளின் தாயார் வெகு புத்திசாலியும் நற்குணசாலியுமாய் இருந்து வந்த தன்மை அலி சகோதரர்களின் அன்னை இன்றைக்கு இருக்கும் மாதிரியாலேயே, யாவரும் தெளிவாய் அறியலாகும். வெகு உயர்ந்த உத்தமி யன்னையின் பழக்கத்தால் வளர்ந்த குழந்தைகளாததால், அலி சகோதரர்கள் நிலையற்ற புகழ்பெற்று வருவது நமது தேசத்தின் அன்னைமார்களின் மாட்சிக்கு சாக்ஷியம் அன்றோ !

இவ்வன்னையின் சங்கடங்களும், அவைகளிலி ருந்து தனது தைரியத்தாலும் ஊக்கத்தாலும், புத்தி

சாலித் தனத்தாலும் ஜயம் அடைந்து, தனது குழந்தைகளையும் குடும்பத்தையும் முன்னுக்கு கொண்டு வந்ததைப்பற்றி, நாம் வரைவதாய் இருந்தால், அதுவே ஒரு புத்தகமாய்விடும். ஆதலால் அதையிவண் கூறவில்லை.

1889-ம் ஆண்டில் பேரிலி (Bareilli)யில் இருந்த பள்ளிக்கூடத்தில் தன் மூத்தகுமாரரான ஷௌகத் அலியை சேர்த்து, பிறகு அலிகார் (Aligarh) பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினர். குழந்தை ஆங்கிலேயக் கல்வி பயில்வதில் அம்மாதுக்கு வெகு ஆத்திரமிருந்தது. இவ்வாறு குழந்தை கல்வி பயில்வதில் இவ்வன்னை எடுத்துக்கொண்ட ஸ்ரமத்துக்கும் ஊக்கத்துக்கும் அளவு கொஞ்சமும் இல்லை. முகமத் அலியும் அப்பள்ளியிலேயே கல்வி பயில ஏற்படுத்தப்பட்டார்.

தனது குழந்தைகளின் படிப்பு எப்படியிருக்கிறதென்று அறியவும், அவர்களுக்கு எவ்வாறு கல்வி புகட்ட வேணுமென்று உபாத்தியாயர்களுக்கு தெரிவிக்கவும், அடிக்கடி இவ்வன்னை அலிகார் பள்ளிக்கூடம் போய் வருவது வழக்கம்.

"கல்வி யழகே யழகு" அவ்வழகு தன் குழந்தைகளடையின் தன் கலி தீருமெனவெண்ணி, தன் குழந்தைகளின் அருகேயிருந்து என்னேரமும் ஆண்டவரைத்தொழுது வந்த அன்னையே! பிற்காலத்தில் உமது அருமைப் புதல்வர்கள் சின்ட்வாராவில் (Chhindwara) அடக்கு முறைச்சட்டத்தால் கட்டுண்டு அடைக்கப்பட்ட காலத்தும் அருகிருந்து அவஸ்தைகளை பொறுத்த பொறுமைக் களஞ்சியமே! பின்னும் தன் மக்கள் இருவரும் ராஜாங்கசேனைலாகாவில் மகமதியர் சேரக்கூடாதென்றும் முன் சேர்ந்திருப்பவர்களெல்லாரும் வேலையை விட்டு விடவேணுமென்றும் தீர்மானம் செய்து ராஜாங்க சேனை வேலைக் கலகம் செய்ததாக உண்டான குற்றத்துக்கு கைது செய்யப்பட்டு க்ராச்சி (Karachi) யில் பிரதம விஜாரணை காலத்திலும், தானும் தன் அருமை மருமகளான மகமத் அலியின் பீகம்ஸாகீபாவும் தைரியத்துடன் இருந்து தேசீய உழைப்பை கைக்கொண்டு ஸ்வதேச துணியான 'கதர்' உடுப்பையே எல்லோரும் அணியுமாறு கேட்டுக்கொண்டும், அங்கோரா (Angora) தேசத்துக்கு உதவி புரியவேணுமென்று தொகைகள் வசூலித்தும், இப்பரதநாட்டில் இருக்கும் இந்தியர்கள் தன்

மக்களைப் போல வும் சகோதரர்களைப் போலவும் தான் கருதுவதால் தனக்கு முகமூடி (Veil) வேண்டாமென்று எடுத்துப்பிரசங்கம் செய்துவரும் பாரதமகளே! "சேயே செல்வம்" என்று ஆன்றோர் உரைத்த உண் மையை கடை பிடித்து, தன் குழந்தைகளை ஒரு தாய் எவ்வாறு பழக்கவேண்டுமென்று நாடெங்கும் தெரிவி க்க நிற்கும் மாதர் சிகாமணியே! உமக்கு நிகர் யாரும் இல்லையெனப்பேர் அடைந்தீர்! உமது அதிஷ்ட்டமே யதிஷ்ட்டம். வயோதிகம் என்னும் திருடன், இவ் வன்னையின் தேகமென்னும் வீட்டில் புகுந்தும், தைரி யம், மதவிச்வாஸம், ஊக்கம் முதலிய சொத்துக்களை அப கரிக்கவொட்டாது, தன்னிடம் வைத்து பாதுகாத்து, புகழடைந்த இவ்வன்னையின் பேரும் கீர்த்தியும் இப் பரதகண்டம் இருக்கும் அளவு ஓங்கி நிலைநிற்குமென் பதற்கு சந்தேகமில்லை.

---

# அத்தியாயம். 2

## இவரது கல்வி.

அலிகார் நகரில் படித்துவந்த காலத்தில் அலி சகோதரர்களுக்குள் இருந்த ஸகோதர வாஞ்சை யாவராலும் கொண்டாடப்பட்டது. ஓர் உயிரும் ஈருடம்புமாய் இவர்கள் இருந்தது அவர்கள் மாதாவுக்கு அத்தியந்த சந்தோஷத்தை விளைவித்தது. அலிகாரில் கல்வி பயிலுங்காலத்தில் முகமத் அலியின் புத்தி தீட்சண்ணியம் அதிகரித்தது. கண்டோர் யாவரும் அதிசயித்தார்கள். இவருக்கு ஞாபகசக்தி வெகு அதிகம். இவர் ஏகசந்தக்கிராகியாய் விளங்கினர். இவர் எழுதிய வியாஸங்கள் எல்லோருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. இவரது தீவிர புத்தியும், கல்வித் திறமையும், ராம்பூர் ராஜ்யத்தின் மந்திரிக்கும் நவாப்புக்கும் எட்டியது. தனது ராஜ்யத்திலிருந்துள்ள தனது ஆட்சிக்குட்பட்ட குடும்பத்துக் குழந்தை இவ்வாறு கல்வித் திறமை வாய்ந்ததாலுண்டான சந்தோஷத்தால் நவாபின் மந்தி

ரியார் இங்கிலாண்டு (England)க்கு இவரை அனுப்பி (I. C. S.) ஐ, ஸி. எஸ். பரிக்ஷைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். அவ்வாறு முகமத் அலியும் இந்நாடு விட்டு இங்கிலாண்டு சென்றார். கல்வி புகட்டுவதில் பேர் பெற்றிருந்த ஆக்ஸ்போர்டி (Oxford) லேயே இவர் தங்கி 1898 முதல் 1902 வரை லிங்கன் (Lincoln College) கலாசாலையில் கல்வி பயின்று வந்தார். பள்ளிக்கூடத்தில் தன்னுடன் பயின்று வந்தவர்களிடம் நேசம் காட்டி, அவர்களெல்லாரும் தன்னிடம் வெகு அன்பு பாராட்டி, அவ்வன்பு நாளுக்கு நாள் அதிகரிக்குமாறு நடந்து கொண்டு வந்தார். தன்னுடைய பள்ளிக்கூட பாடங்களில் மட்டும் தன் கவனத்தை செலுத்தாமல், பற்பல விஷயங்களையும் தெரிந்துக் கொள்ள இஷ்டப்பட்டு, பொது விஷய புத்தகங்களில் தன் கவனத்தை செலுத்தியதால், சரித்திரப் போட்டிப் பரிக்ஷையில் (Historical Tripos) தலைமையாக பாஸ் செய்யக் கூடவில்லை. அதனாலேயே, ஐ. ஸி. எஸ். பரிக்ஷையில் உயர்ந்த ஸ்தானத்தை இவர் அடையமுடியவில்லை. தனது உத்தியோகத்துக்கு வேண்டிய ஐ. ஸி. எஸ். ஸ்தானத்தை அடையாவிட்டாலும் பொது விஷயங்களில் தேர்ச்சியடையக்கூடிய புத்

தகங்களேயும், உலகப்பழக்கத்துக்கும் மனதை விசாலிக்க ச்செய்வதற்கும், தத்துவ குணமும் பொது ஜன உழைப் பும் அதிகரிக்கச் செய்வதற்கும் ஏற்பட்டுள்ள பல வியாஸங்கள் சரித்திரங்கள் முதலிய புத்தகங்களேயும் நன்கு படித்திருந்தார்.

1902ம் ௵ இவர் இங்கிலாண்டிலிருந்து இந்தி யாவுக்கு வந்து, தனக்குச் சொந்தமெனக் கருதும் ராம்பூர் ராஜ்யத்து கல்விலாகாவில் தலைமை உத்தியோ கம் பெற்று, சில காலம் வேலை பார்த்து வந்தார். ஆயினும், சில மாதங்கட்கெல்லாம் திரும்ப இங்கி லாண்டு சென்று, தனது பரிக்ஷையை முடித்துக்கொள்ள ப்போனர். பிறகு அதே வருஷம் மத்தியில் இந்தி யாவுக்கு திரும்பி வந்துவிட்டார்.

வந்ததும் அலகபாத்தில் (Allahabad) வக்கீல் பரீக்ஷக்கு ஆஜர் ஆகி அதில் தேராமல் போய்விட் டார். இவ்வாறு ஜீவனத்துக்கு ஏற்பட்ட படிப்பு பரீ க்ஷைகளில் இவர் தேராது போனதுதான், இந்தியர் களின் அதிர்ஷ்டம் என்று எண்ண இடம் இருக் கிறது. இனிமேல்தான் ஒரு உத்தியோகத்தில் அமர வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு ஏற்பட்டது.

# அத்தியாயம். 3

## இவரது உத்தியோகம்.

முன்பு இவர் இங்கிலாண்டில் ஆக்ஸ் போர்டு கலாசாலையில் படித்த காலத்தில் பரோடா (Baroda) தேசத்து மகா ராஜா கேய்க்குவாரின் (Gaikwar) குமாரருக்கு இவரைத் தெரிய நேரிட்டது. ஸ்வபாவமாக யாவரிடமும் அன்பு பாராட்டும் தன்மையை யுடைய முகமத் அலியின் குணம் பரோடா கெய்க்வாரின் குமரார் பாத்தேஸிங் (Fateh Singh) கை இழுத்தது தனது குமார் மூலம் ஹிஸ்ஹைனஸ் (His Highness) கெயிக்குவாருக்கும் முகமத் அலியின் அரிய குணம் எட்டியது.

ஆகையால் ஏதேனும் ஓர் உத்தியோகத்தில் அமரவேணுமென்ற எண்ணங் கொண்ட முகமத் அலி பரோடாவிற்கு வந்து பற்பல உத்தியோகஸ்தானங்கள் வகித்து வந்தார். அவ்விராஜ்யத்தில் தனது பார்வையி

விருந்த லாகாவில் பற்பல சீர்திருத்தங்கள் செய்தார். அவரது சீர்திருத்தங்களெல்லாம் பொது ஜனங்களின் நன்மை நாடியதாகவேயிருந்தது. ஜனங்கள் இவரது சீர்திருத்தங்களுக்கு நன்றி பாராட்டியும் வந்தார்கள். முக்கியமாக அவர் அத்தேசத்து பூர்வகுடிகளின் வறுமை நிலையையும் அவர்களுக்கு பூமி வீடு முதலியன வேண்டின் அதிக துகை கொடுத்து கஷ்டப்படும் ஸ்திதியையும் நினைந்து நினைந்து உருகினர். தனது சீர் திருத்தங்களை வெளியிட்டார். ஹிஸ் ஹைனஸ் கெய்குவாரும் இவரின் ஊக்கத்தையும் சாதாரண ஜனங்களிடம் இவருக்கு இருந்த அன்பையும் வியந்தார். சீர்திருந்தங்கள் ஊர் ஜிதத்துக்கு வரவே பணக்காரர்கள் ஏழைகளுக்கு செய்து வந்த துன்பமும் குறைந்தது.

இவர் வேலையாய் இருந்த காலத்தில் இவர் பார்வையில் இருந்த லாகாவிலிருந்து வரும்படி அதிகரித்தது. கெய்குவார் மகாராஜாவும் இவரது புத்திநுட்பத்தையும் அருமையான வேலையையும் எண்ணி இவர் பேரில் அதிக விச்வாஸம் வைத்தார்.

ஆயினும் கொஞ்ச காலத்துக் கெல்லாம் அவர் தன் வேலையிலிருந்து 2 வருஷம் லீவ் பெற்றுக் கொண்டு பொது ஜனவிஷயங்களுக்கு ஊழியம் செய்ய வெளிவர நேரிட்டது. தன்து மார்க்கத்தவர்களும் தன்ஸ்வ தேசமும் முன்னுக்கு வரும்படியான வழியை நாடவேண்டி அவாவுற்றூர்.

இவ் விஷயத்துக்கு இந் நாட்டாரெல்லாரும் பொது ஜனவிஷயங்களை அறிந்திருத்தல் இன்றியமையாத தென்று அறிந்து இவ்விந்தி யாவின் பிரதான நகராயிருந்த கல்கத்தா (Calcutta) நகரத்தினின்று "காம் ரேட்" (Comrade) என்ற ஒருவாரபத்திரிகை பிரசுரிக்க ஆரம்பித்தார். இவரது முக்கிய கருத்து ஜனங்களின் எண்ணமும் அவஸ்தைகளும் இந்திய தேசத்தின் அரசு அங்கத்தினர்கள் நன்கு அறியவேண்டு மென்பதாதலால் கல்கத்தாவை தேர்ந்தெடுத்தார்.

ஜோரா (Jaora) ராஜ்ஜியத்து நவாபு இவரை தனது ராஜ்ஜியத்து மந்திரிஸ்தானத்தை வகிக்க வேணுமென்று கேட்டுக் கொண்ட போதும் இவர் மறுத்து விட்டார். 1918ம் வருஷம் பஞ்சாப் (Panjaub)

மாகாணத்து லப்டினன்டு கவர்னரா (Lieutenant Governor) யிருந்து பஞ்சாப் விஷயமாகஇந் நாடெங்கும் கிளர்ச்சி செய்யக் காரண ராயிருந்த வரும் அக்காலத்தில் ஸெண்ட்ரல் இண்டியா ஏஜன்ஸி கமிஷ்னராகவும் (Agent to the Governer General for Central India) இருந்த வருமான ஸர்மைகேல் ஓட்வியர் Sir Michael O'Dwyer) கூட அக்காலத்தில் ஜோரா ராஜ்ஜியத்து மந்திரி ஸ்தானம் வகிக்க வேணுமென்று கேட்டுக் கொண்ட போதும், தான் ஒரு பத்திரிகை வெளிப் படுத்தி பொது ஜனவிஷயத்தில் தனது காலத்தை செலழிக்க தீர் மானித்து விட்டதால், தன்னால் அந்த ஸ்தானத்தை வகிக்க முடியா தென்று சொல்லி விட்டார்.

# அத்தியாயம். 4

## இவரது வியாஸ மெழுதும்தேர்ச்சி

முகமத் அலி பரோடாவில் வேலையாயிருந்த போதே தனக்கு அவகாசமுள்ள நேரங்களை இந்திய ஜனங்களின் நிலமை யாராய்ச்சிக்கேற்ற எல்லாபிரசுரங் களையும் படிப்பதினலேயே செலவழித்தார்

பலசமயங்களில் பொது ஜனங்களின் கஷ்டங்களை யும் அவைகளை எவ்வகையாக நிவர்த்திக்கலாம் என்னும் விஷயத்தையும் பற்றி பம்பாயிலிருந்து வெளிவரும் "டைம்ஸ் ஆப் இன்டியா" (Times of India) பேப்பரில் அடிக்கடி எழுதிவந்தார். 'டைம்ஸ் ஆவ்இன்டியா' பேப்பரை பலபெரிய இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் படித்து வருகிறார் களென்று சொல்வது அனவசியமான விஷயம். அதிலும் முகமத் அலிஅடிக்கடி இந்தியா ஜனஅதிருப்தியைப்பற்றி எழுத ஆரம்பிக்கவே அநேக பெரிய கனவான்களும் உத்தியோகஸ்தர்

களும் படிக்க நேர்ந்தது. இவரது வியாஸத்தின் அருமையையும் பெருமையையும் பற்றி அக்காலம் வைஸராயாகவிருந்த லார்ட் மின்டோ (Lord Minto) அடிக்கடி புகழ்ந்து கூறியிருக்கிறாரென்றால் நாம் யாது கூறல்வேண்டும். ஆமதபாத்தில் (Ahmedabad) கூடின பம்பாய் மாகாணத்து மகமதிய வித்தியா விஷயசங்கத்திலும் (The Bombay Presidency Muhamadan Educationial Conference) அதே வருஷம் லக்ஷ்மணபுரி (Lucknow) யில்நடந்த சகல இந்திய முகமதிய வித்யா சங்கத்திலும் (The All India Muhamadan Educational Conference) லும் இவர் உபன்னியாஸம் செய்தது யாவராலும் புகழப்பட்டது. 1907ம் வருஷத்தில் அலிகாரின் கல்லூரியின் விஷயமாக அநேக வியாஸங்கள் எழுதினார். இவ்வரை அடிக்கடி பேர்பெற்ற ஆங்கில பேப்பர் களின் பத்திராசிரி யார்களே தங்கள் தங்கள் பிரசுரங்களுக்கு வியாஸங்கள் எழுதவேணுமென்று கேட்டுக் கொண்டார்கள் என்பதாலேயே இவரது வியாஸம் எழுதும் பெருமை விளங்கும். இந்தியாவின் பழய நிலைமையும் தற்கால நிலைமையும் (India : Past and Present.) என்றதலைப்பில் இவர் 'ஹிந்துஸ்தான் ரிவியூ' (Hindustan Review) வில்எழு

தியது இன்று படிப்பவர்களுக்கும் ஆச்சரியமும் அடை ந்து பயன் படும்படியானதாயிருக்கிறது. லார்டு மின்டோ கவர்னர் ஜெனரலாகவும் (Governor General) லார்டு (அப்போது மிஸ்டர்) மார்லி (Mr. Morley) இந்தியா கவர்ன்மென்டு சிக்ரடரியாகவும் இருந்தகாலத்தில் இவர் களிருவரும் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் விஷய மாக இவர் தனது மனவெண்ணத்தை வெளிப்படுத்த மேற் கண்ட சீர் திருத்தங்களை வியந்து வந்த லேட் கோகலே (Mr. G. K. Gokhale)க்கும் இவருக்கும் தற் கம் உண்டாயிற்று. இவரது சகோதரர் ஷௌகட் அலி யின் அபிப்பிராயங்களை கண்டித்து எழுதிய பல வியா ஸங்களுக்கு முகமத்அலி பதிலாக பலவியாஸங்களை லாகூ (Lahore) ரில் வெளிவரும் 'ஆப்ஸர்வர்' (Observer) என்ற பத்திரிகையில் எழுதி வந்தார். அலிகார் நகரின் கல்லூரி மாணுக்கர் அனைவரும் இவ்வியாஸங் களை படித்து ஆனந்தம் பெருகி அவர்களுடைய இரு கண்கள் போல இவ்வலி சகோதரர்களை எண்ணி அன்பு பாராட்டி வந்தார்கள்.

# அத்தியாயம். 5

## இவரால் வெளியிடப்பட்ட 'காம்ரேட்' பத்திரிகை.

முன்னமேயே முகமத் அலி பரோடா ராஜ்யத்தில் அபின்லாகாவில் (Opium Department) உத்தியோகமமர்ந்திருந்தபோதே பல பத்திரிகைகளுக்கும் முக்கியமாக 'டைமஸ் ஆவ் இந்தியா' வென்னும் பத்திரிகைக்கும் அடிக்கடி பொதுஜன விஷயமாக பல வியாஸங்கள் எழுதி வந்ததாக கூறினோம். பிறகு தேசீய உழைப்புக்கும் தனது மதஸ்தர்கள் அபிவிர்த்திக்கும் காரணமாகவும் தன்னால் தேசத்தாரும் தன் மதத்தாரும் பொது விஷயங்களை அறியும்படி பத்திரிகை ஒன்று வெளிப்படுத்த வேண்டியும் இரண்டு வருஷம் தனது வேலையினின்றும் ரஜாவெடுத்துக் கொண்டார் என்றும் கூறினோம். கல்கத்தாவில் 1911-ம் வருஷம் ஜனவரி மீ 14-ம் தேதி இவரது பத்திரிகை முதல் முதல் வெளி வந்தது. தனக்கு பத்தி

ரிகை பிரசுரம் செய்ய அதிக அப்பியாஸமும் அனுபவமும் இல்லையாயினும் தேசிய விருத்தியை முன்னிட்டு இக்காரியத்தை கைக்கொண்டார். பத்திரிகாசிரியராக தான் இருந்தவரையில் தனது சுருசுருப்பாலும் ஊக்கத்தாலும் சரிவர தானகவே பிரசுரம் செய்து வந்தார். பின்னல் கொஞ்சகாலம் 'நியூ இரா' வென்ற பத்திரிகையை ஸ்தாபித்த லேட் 'ராஜா குலாம் உசேன்" (Raja Gulam Hussain B. A.) என்பவர் சில காலம் உதவி பத்திரிகாசியராகவிருந்தார். தனது 'காம்ரேட்' என்னும் பத்திரிகை வெளிவந்ததும் தனது எண்ணமும் பத்திரிகையின் கருத்தும் யாரும் அறிய பகிரங்கம் செய்தார். இந்தியாவில் பல நூற்றுண்டுகளாக குழப்பத்தாலும் அரசாக்ஷிகளின் மாறுதல்களாலும் பல வகுப்பினர்கள் குடியிருத்தலாலும் பல மதஸ்தர்கள் இருந்து பற்பல எண்ணத்துடன் ஆண்டு அவரவர்களுக்கு வேண்டிய ஸாதனமடைய அவாக்கொண்ட செய்கைகளாலும், மற்றும் அரசாங்கத்தார்களால் ஒரு வகுப்புக்கும் மற்ற வகுப்புக்கும் உண்டாக்கப்பட்ட எண்ண விரோதத்தாலும் சிதறுண்டு தத்தளிக்கும் இந்தியர்கள் தங்கள் தங்களுக்குள் அன்னியோன்யபாவம் அடைந்து சகோதரத்வம் அறியும்படி செய்ய

தன்னால் இயன்றளவு உழைப்பதே தன் எண்ணமென்றும் அதே தன் பிரசுரத்தின் கருத்தென்றும் பகிரங்கம் செய்தார். அரசாங்கத்துக்கும் குடிகளுக்கும் உண்டான பிரிவு நாளுக்கு நாள் அதிகப்படுவதைக் கண்டு மனநொந்து குடிகளின் கடமையும் பாத்தியதையும் இவ்வளவென்றும் அரசாங்கத்தாரின் கடமையும் பாத்தியதையும் இவ்வளவென்றும் வரையறுத்து இருதரத்தார்களும் ஒத்துழைத்து தேசம் க்ஷேமமடைய வேணுமென்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்து வியாஸங்கள் எழுதியும் வெளியிட்டார். தன் தேசத்தில் பற்பல சமயங்களாலும் பற்பல நாகரீகங்களாலும் ஜனங்கள் பற்பல வகுப்பினர்களாக இருந்து வருவதையும், அந்நிய நாட்டு ஜனங்கள் தங்கள் தங்கள் தேசமுன்னேற்றத்துக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கௌரவம் பெற்று தங்கள் தங்கள் நாடுகளை ஸ்வயவராங்க நிலைக்கு கொண்டு வந்திருப்பதையும் எண்ணி அந்நிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இருக்கும் வித்தியாஸ நிலைமையை அறிந்து வியஸனப்பட்டார்.

மகமதியர்களும் ஹிந்துக்களும் ஒரு மனதுடன் சேர்ந்துழைத்து தாய் நாட்டை மேன்மைப்பட செய்ய

வேண்டியது இந்தியர்களின் முதன்மையான கடமை யென்று அடிக்கடி வற்புறுத்தினர். தன் மதத்தினர் கள் மட்டும் முன்னுக்கு வந்தால் போதுமானதென்றும், முழுதேசமும் முன்னடைவதற்கு முன் அவரவர் வகுப் பினர் மட்டும் முன்னேற்றமடைவது தான் நல்லதென் றும் எண்ணியிருத்தல் பிசகென்றும் ஒவ்வொரு மதத் தனும் தான் முதலில் இந்தியன் என்றும், பிறகு தான் ஹிந்து மகமதியன் என்றும் எண்ணவேண்டும் என்று அடிக்கடி எடுத்துக் காட்டினர்.

இதுநிற்க, வங்காளமாகாணம் லார்டுகேர்ஸன்(Lord Curzon) என்பவர் வைஸ்ராயாகவிருந்த காலத்தில் பிரி வினையாக்கப்பட்டதில் ஒரு பிரிவில் மகமதியர்களே அதி கமாகவும் மற்ற பிரிவில் இந்துக்களே அதிகமாகவும் இரு ந்து வந்ததும், இவ்வாறிருப்பதின் கெடுதியும் ஜனங்க ளின் எண்ண விரோதமும் அதிகரித்து வந்ததும், சிற்சில காலங்களில் ஹிந்து மகமதியர்களுக்குள் நிகழ்ந்த வாத மும், அக்கால முதற்கொண்டு மகமதியர்கள் தனியாய் 'முஸ்லீம் லீக்' (Muslim League) என்று ஸ்தாபித்து தங்கள் கருத்துகளையும் குறைகளையும் வெளியிட்டதும், ஹிந்துக்களும் மற்றோரும் 'இந்தியன் நாஷனல் காங்கி

ரஸ்' (Indian National Congress) ஸபையில் தங்கள் குறைகளை சொல்லி சீர்திருத்தங்களுக்கு முறையிட்டதும், எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சுமார் 10 வருஷங்களாக ஹிந்துக்களும் மகமதியர்களும் அரசாங்க சீர்திருத்த விஷயமாக பொதுவில் வேலை செய்யாமல் தனித்தனியே தங்கள் தங்கள் கருத்துக்கிணங்க உழைத்ததும் யாரும் அறிந்த விஷயம். கடாசியில் லக்ஷ்மணபுரி (Lucknow) யில் தான் 1916-ம் வருஷம் இருவகுப்பினரும் தங்கள் தங்கள் மனநிலைமையை தனித்தனி வெளிப்படுத்துவதின் பிரயோஜன மின்மையையும், இருவகுப்பினரும் சேர்ந்து பொதுமாதாவான இப்பரத நாட்டுக்கு உழைப்பது இன்றியமையாததென்பதையும், அறிந்து 'இந்தியன் நாஷனல் காங்கிர'ஸும் 'மூஸ்லிம் லீக்கும்' ஒன்றாக சேர்ந்து ஒத்துழைக்கத் தீர்மானம் செய்ததென்றும் யாவருமறிந்த விஷயம்.

ஆதலின் 1916-ம் வருஷம் இவ்விருசபைகளும் ஒருமனப்பட்டு தீர்மானிப்பதற்கு முன்னதாகவே முகமத் அலி இரு வகுப்பினர்களும் ஆரியமாதாவுக்கு இருகண்கள் போன்றனவென்றும் இருதரத்தார்களும் தங்கள் மனதில் யாதொரு சந்தேகமும் விரோதமும்

இல்லாமல் தேசிய முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டுமென்பதை தன்னால் ஆனவரை வற்புறுத்தியிருக்கிறார்.

இவ்வாறான கருத்துடன் முகமத் அலி, தனது 'காம்ரேட்' என்னும் பத்திரிகையை அரசாங்கத்தாரின் தலைநகராயிருக்கிற கல்கத்தாவிலிருந்து வெளியிட்டார். முதலில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பலரும் இப் பத்திரிகையைப் படித்து ஆனந்தித்தார்கள். இவரது உண்மையான சொல்லும் ஜனங்களின் நன்மைக்கு வேண்டிய விஷயங்களையும் அவர்கள் படும் கஷ்டங்களையும் ஒளிக்காமல் வெளிப்படையாக பகிரங்கப்படுத்தும் தன்மையும் பற்றி வைஸராயாகவிருந்த லார்டு ஹார்டிஞ்சு, லேடி ஹார்டிஞ்சு, லேவ்ட்டினன்டு கவர்னர் மேஸ்டன், விளீட்வுட்டு வில்ஸன், லௌவேட்டு ப்ரேஸர் (Lord and Lady Hardinge, Sir James Meston, Sir Guy Fleetwood Wilson, Sir Lovat Fraser) முதலிய சீமான்கள் சிலாகித்தார்கள். இப்பத்திரிகையை அரசாங்கத்து உயர்தர உத்தியோகஸ்தர் பலர் சந்தாதாராகவிருந்து ஆதரித்தும் வந்தார்கள். ஆயினும், மகமதிய ஜனங்க

ளுடைய அபிவிர்த்திக்கு மட்டும் தனது எண்ணத்தை வைக்காமல் பொதுவாய் இந்தியர்களின் முன்னேற்ற விஷயமாய் எழுதி, சுயவாட்சியின் மஹிமையைப் பற்றியும், ஜனங்களின் கஷ்ட நிலைமையையும் அவைகளின் நிவர்த்திக்கு, வேண்டிய அம்சங்களின் அவசியத்தைப் பற்றியும், பகிரங்கமாய் வெளிப்படுத்தவே, இக் 'காமரேட்'டின் பேரில் உத்தியோகஸ்தர்களுக்கு வெறுப்பு உண்டாக ஆரம்பித்தது. அந்நாளிலும் சரி, இப்போது இவர் கேஸின் நிமித்தம் சிந்து (Sind) தேசத்தின் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும்போதும் சரி, அரசாங்கத்து உத்தியோகஸ்தர் மேல்யாதொரு வெறுப்பும் இவருக்கு கிடையாது. அரசாங்கத் தன்மையைப்பற்றித் தான் இவர் எதிர்ப்பது.

1912-ம் வருஷம் வைஸராயின் தலைமை நகராக டில்லி (Delhi)ஏற்பட்டது. தானும் டில்லி நகருக்குச் சென்று அரசாங்கத்துக்கு தன் பிரசுரம் மூலம் எடுத்துரைப்பதற்கு அங்கே 'காம் ரேட்'டை வெளி யிடலானார். அங்கே தனது பிரசுரத்துக்கு பற்பல இடையூறுகள் ஒன்றின்பின் ஒன்றாக வர ஆரம்பித்தாலும், பொது ஜன நன்மை விஷயங்களில் ஊக்கத்து

டன் உழைக்கலாயினர். அது வரை அவ்வளவு அதிக மாய் தேசிய விஷயங்களில் தலையிட்டுக்கொள்ளாத டில் லிப்பிரதேசமும் ஊக்கமுடன் ராஜீய விஷயத்தில் ஈடு பட நேரிட்டது.

# அத்தியாயம். 6.

## முஸ்லிம் லீக்.

முன் அத்தியாயத்தில் 'முஸ்லீம் லீக்' என்னும் சபை எவ்விதம் உண்டாயிற்றென்பதையும் அது பிறகு எவ்விதம் 'இந்தியன் நாஷனல் காங்கிரஸ்' மகா சபையுடன் சேர்ந்து போயிற்றென்பதையும் சுருக்கமாய்ச் சொன்னோம். இப்போது அவ்விஷயத்தை சற்று விவரமாய் எழுதுவது அவசியமாயிருப்பதால் அதைப் பற்றிக் கூறுவோம்.

இந்திய் தேசத்தில் ஜனங்களுக்கு ஏற்பட்ட குறைகளை அரசாங்கத்தாருக்கு தெரிவித்து அவைகளை தீர்த்து அரசுரிமை யடைய வேண்டுமென்று சென்ற 35 வருஷங்களாக உழைத்து வரும் மகாசபை 'இந்தியன் நேஷனல் காங்கிரஸ்' தான். அதில் வெகுவாய் உழைத்து சபை கூட்டி வைப்பதும் வாதிப்பதும் தங்கள் கடமையாகக் கொண்டவர்கள் உயர்தரக்கல்வி யடைந்த

இந்தியர்களே. பலகாலமாக மேல் நாட்டுக்கல்வி புகட்டியதில் பலவகை லாப மடைந்த இந்தியர்கள் மேல் நாட்டில் இருந்த தேசியக்கிளர்ச்சிக்கு ஆவலும் அடைந்து விட்டார்களென்றும் அவர்களை அந்தநிலைமையை அடையாமல் செய்ய அடக்கு முறை குறிப்பாய் செய்தல் இந்திய ராஜாங்கத்துக்கு இன்றியமை யாததென்றும் எண்ணங்கொண்ட ஆங்கிலர் அநேகர். ஆயினும் தம் போன்ற இயர்க்கையுடனும் பொது ஜனவிச்வாஸத்துடனும் இருப்பவர்கள் இந்தியர்களென்றும், அவர்களது தேசியக்கிளர்ச்சிக்கு ஸாதகம்செய்து அவர்களுக்கு ஸ்வயேச்சையைக் கொடுக்க வேண்டியதென்று எண்ணின ஆங்கிலர்கள் சொற்பமே. இந்திய ஆட்சிக்கு தலைமை வகித்த பலவைஸராய்களில் லார்டு ரிப்பன் (Marquis of Ripon) பிரபு போன்று ஜனங்களுக்கு அரசாங்கப் பயிற்சி அடையும்படி செய்வது சர்க்காரின் கடமையென்றும்படிப்படியாக அவர்களுக்கு தேற்சியடையச் செய்ய வேண்டுமென்றும் எண்ணினவர்களும் உண்டு. ஆயினும் இந்நூற்றூண்டு பிறந்த காலம் வைஸராய்ப் பதவியை வகித்த லார்டு கர்ஸன் பிரபுவோ, தனது கர்வத்தினுலும் அரசாங்கமென்பது இணையற்ற வலிமை யடைந்திருத்தல் தானென்றும் கொண்ட கருத்தினுலும் இந்தி

யர்களை பிரித்து ஆள்வது அரசாங்கத்து முக்கியமான முறையென்றும் கைக்கொண்டு ஒரு அழகிய எடுப்பு எடுத்தார். அதாவது, இந்தியாவின் இதர மாகாணங்கள் முன்னேற்ற மடைவதற்கு முன்னதாகவே மேல் நாட்டு கல்வியில் அபிவிர்த்தி யடைந்து மேல்நாட்டுத் தேசங்கள் போல உன்னத திசைக்கு இந்தியாவும் வர வேண்டு மென்று பிரசங்கங்களாலும் உபந்நியாஸங்களாலும் வெளிப்படுத்திய கல்விமான்கள் நிரம்பிய வங்காள மாகாணத்தை இரு துண்டாகப் பிரித்தார். சீமையில் இருந்த அதிகாரிகளும் பொறுப் பாளிகளும் கர்ஸன் பிரபுவின் கருத்துக் கிணங்கி அப்பிரிவினை அரசாங்க முறையின் அவசிய மென்றும் ஆமோதித்தார்கள். இந்தியர்களுக்கு உண்மை யுரைக்கும் குணம் இல்லையென்று பகிரங்கமாய் உரைத்த மகானுபாவரான கர்ஸன் பிரபு இவ்வாறு செய்த வங்காளப் பிறிவினையால் படித்த இந்துக்களின் பதவி குறையுமென்றும் கீழ் வங்காள மாகாணம் ஏற்படுத்தியதாலும், அதில் மிகுதியாயிருந்த மகமதியர்கள் தன் பங்கிலிருப்பாரென்றும் எண்ணின கர்ஸன் பிரபுவின் கருத்தும் சிலகாலம் முத்தி பெற்றது. அப்பிறிவினை கால முதல் தான் இந்தியாவில் படித்த ஜனங்களுக்கு மட்டுமல்லா

மல் பாமரஜனங்களுக்குக்கூட ராஜாங்க விஷயத்தில் நோக்கமுண்டாக ஆரம்பித்தது. தேசீயக் கிளர்ச்சிகள் ஆரம்பித்தன. பற்பல விடங்களில் வங்காள மாகாணத்தில் இவ்வாறு பொது ஜனங்களின் இஷ்டத்துக்கு விரோதமாக அரசாங்கத்தார் வங்காளப்பிறிவினை செய்தது பிசகென்று கூட்டங்கூட்டி தீர்மானிக்க ஆரம்பித்தார்கள். அரசாங்கத்தாரும் கூட்டத்தை தடைசெய்தும் அதற்கு காரணமாயிருக்கிற அநேக தலைவர்களை தண்டிக்கவும் ஆரம்பித்தார்கள். வெகுகாலம் இந்தியர் விஷயமாக உழைத்து வங்காள சிங்கமெனப் பெயரடைந்து தற்காலம் மந்திரி வேலைத்தன்மை வகித்து வரும் சுரேந்திரப் பிரபுவும் (Babu Surendra Nath Bannerjea) பாரிஸால் நகர்க் கூட்டங்கூடிய சம்பந்தமாக அரசசிஷைக்ஷயுமடைந்தார்.

இவ்வாறு அடக்குமுறை அதிகரித்து ஜனங்களுக்கு ஊக்கமும் உண்டாயிற்று. ஆனால் அக்காலம் அரசாங்கத்தார் செய்தது வெகு நன்றென்றும் இவ்வாறு பிரிவனையால் தங்களுக்கு லாபம் உண்டென்றும் தங்களுடைய வகுப்பினரின் நன்மையை அப்போதுதான் அரசாங்கத்தார் கவனிக்க ஆரம்பித்தார்களென்றும் தங்

கள் மதத்தார் அபிவிர்த்திக்கு ஆரம்ப மாயிற்றென்றும் கருதிய மகமதிய சகோதரர்கள் அரசாங்கத்தாருடன் ஒரு மனப்பட்டு சேர்ந்து இந்தியர்கள் செய்யும் தேசீயக் கிளர்ச்சி குழப்பத்துக்கு காரண மென்று அறிவித்து அவ்விந்து மகாஜனசபையில் தாங்கள் சேருவது கூட நன்றில்லையென்றும் தங்கள் மதத்தாருக்கு ஒரு பொது சபை தனிமையாக வேண்டுமென்றும் எண்ணங் கொண்டு மகமதியத் தலைவர்கள் "முஸ்லீம்' லீக் என்ற சபையை 1906ம் வருஷத்தில் ஸ்தாபித்தார்கள்.

இச்சபையின் பிறப்புக்கு முகமது அலியும் கொஞ்ச காரணராகவே இருந்தார். அச்சபையின் முக்கியமான கருத்து ஆரம்பத்தில் முகமதியர்களுக்கு அரசாங்கத்தாரிடம் இருக்க வேண்டிய விச்வாஸம் அதிகரிக்க வேண்டிய வழியைத் தேடவும் முகமதியர்களுக்குள் ஒட்டுறவு அதிகரித்து அவர்களது செல்வாக்கு அதிகமாக வேண்டிய முறைகளை அடையவும், வழி தேடி இதற்கு விரோத மில்லாவிடில் முகமதியர்களுக்கும் மற்றுள்ளோருக்கும் நேசப்பான்மை யடைதலென்பதும்தான். லார்டு மின்டோ பிரபு காலத்திலிரு

ந்து முகமதியர்கள் கணக்கற்ற உன்னத பதவியில் அரசாங்கத்தில் அமர ஆரம்பித்தார்கள். முஸ்லீம் லீகும் பல உயர்தர விடத்தில் வெகுவாய் கொண்டா டப் பட்டது.

இதே சபைதான் இக்காலத்தில் காங்கிரஸ் ஸபையுடன் ஒத்து ஐக்கியமாயிற்று. இது ஒரு ஆச்சரியமே. முஸ்லீம் லீகின் ஆதிகருத்தைப் படிப்ப வர்கள் இப்போது சிறிக்கலாம். அக்காலத்தில் அவர் களுக்கு தேசீய உழைப்புக்கு கடாசி படியாயிருந்தது. எப்படி படிப்படியாக இச்சபை தற்கால நிலைமையை யடைந்த தென்பதை பற்றி வரைவது நமது வேலை இல்லை யாதலால் இம்மட்டுடன் நிறுத்துவோம். அதா வது, கடைசியாக இந்தியன் நாஷனல் காங்கிரஸுடன் சேர்ந்துதான் தேசீய உழைப்பு உழைத்து தம்மவர் களும் முன்னேற்ற மடைய வேண்டியது என்று முடி வுக்கு வந்த விஷயமாக முகமத்அலி பிரயத்தனப் பட்டாரென்பது தான் நமக்கு வேண்டிய முக்கியமான அம்சம்.

# அத்தியாயம். 7

## அலிகார் கலேஜும் முஸ்லிம் சர்வ கலா சாலையும்.

அலி சகோதரர்கள் பாலியர்களாகவிருந்த காலத்தில் அலிகாரிலுள்ள (Muhamaddan Anglo-Oriental College) கல்லூரியில் படித்தார்களென்றும் அவர்களது அன்னையார் அடிக்கடி அக்கல்லூரிக்கு சென்று தன் குமாரர்கள் எவ்வாறு படிக்கிறார்கள் என்று போதகாசிரியர்களை கேட்டு வந்தார்களென்றும் முன்பு கூறினேம்.

பிற்காலத்திலும் அக்கல்லூரிக்கு ஒரு அங்கமென்று அலி சகோதரர்கள் விளங்கி வருகிறார்களென்று யாவரும் அறிவார்.

சுமார் 40 வருஷங்களுக்கு முன் வைஸராயாகவிருந்த லார்டு லிட்டன் (Lord Lytton) பிரபு அலிகாரில் முகமதிய காலேஜிக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். அப்

போது அவ்விடம் கூடியசீக்கிரம் முகமதிய சர்வகலாசாலையாக விளங்க வேணுமென்று தான் பிரார்த்தனை செய்வதாய் லிட்டன் பிரபு சொன்னார். லிட்டன் பிரபு கூறின படியே முகம்மதிய தலைவர்களுக்கும் கல்விமான்களுக்கும் அலிகாரில் முகமதிய கலாசாலை ஸ்தாபிக்கும்படியான விஷயங்களை செய்யவே எண்ணம் ஏற்பட்டது. எக்கல்விக்கும் இன்றியமையாததெனை வைதீக முறைக் கல்வி விளங்க வேணுமென்ற கொள்கை முகமதியர்களுக்கு ஆதிகால முதல் உண்டு. இக்காலத்திலும் எக்காலத்திலும் முகமதியச் சிறுவர்கள் வயிறு நிமித்தம் கல்வி பயில ஆரம்பிக்கு முன் கோரான் (The Holy Quran) என்னும் அவர்களது வேதஸாஸ்திரத்தை படிக்கிறார்கள். சிறுவர்களுக்கு ஆங்கிலபாஷையைப் போதிப்பதைக் காட்டிலும் தாய்ப்பாஷையில் எழுதி யுள்ளதும் தாய் மதத்தைப் போதிப்பதுமான கொரானையே படிக்கச் செய்வது தங்கள் கடமையென்று கொண்டு வைராக்யத்துடன் செய்வது நம்முகமதிய சகோதரர்களே.

ஹிந்து மதத்தில் இருப்பதாக எண்ணிக் கொண்டும், ஹிந்துவெனப் பெயர் மட்டும் புனைந்தும், அன்னிய நாகரீகமென்னும் சமுத்திரத்தில் அமு

ந்தியும் அசைவற்று மிதந்தும் ஆனந்தமடையும் நமது ஹிந்து மக்களே! சற்று யோஜனைசெய்யுங்கள். ஒரு சாண் வயிற்றுக்காக பல நூற்றுண்டுகளுக்கு முன்பாக வே மதமென்னும் விஷயத்தை விட்ட மதியிலியாய் விட்டோமே. மதக்கல்வியை மைந்தருக்குப் புகட்டுவது நம் கடமை யென மகமதியரிடமிருந்து இன்னும் நாம் கற்கவில்லையே. அதிகாலையில் தகப்பனும் குடும்பத் தலைவனுமான மூத்தோன் தன் குழந்தைகளை தூக்கத்தினின்று எழுப்பி, தேவாரம், திருவாசகம், சிவாஷ்டகம் ராமோதந்தம் முதலிய இனிய ரஸங்களை குழந்தைகளுக்கு புகட்டிய காலம் போயிற்றே! அதற்கு பதிலாக குழந்தையை எழுப்பி டி, ஓ, ஜி......... "டாக்" (D. O. G..........dog) என்று கற்பித்துக் கொடுத்து வயிறு பிழைப்பதற்கான விஷயத்தில் மட்டும் பயிற்சி செய்ய மனதைதிருப்பியது போதும்! போதும்!! இனி மேலாகவாவது 'வயிற்றுபாதைக் கல்வி'க்கு முன் மதக் கல்வி புகட்ட ஆண்டவர் நம் மனதில் எண்ணம் உண்டு பண்ணுவாராக.

நமது மகமதிய தலைவர்கள் அலிகார் கல்லூரியில் தம்மதானுஷ்டானத்தை யறிவிக்கும் கல்வியும் சேர்த்து பாலியர்களுக்கு கல்வி போதிக்க வெண்ணினர்கள். அவ்

வாறு செய்தால் தான் பலநூற்றுண்டுகள் முன் மகமதியகல்விக்குப் பேர்போன கார்டோவா பாக்தாது (Cordova, Baghdad) போன்று அலிகாரும் பேரடையுமென்றும் சர்வகலாசாலை ஸ்தாபனத்துக்கு ஸாதகமாயிருக்குமென்றும் எண்ணினுர்கள். முகமத் அலியும், ஹிஸ்ஹைநஸ் அகாகான், ராஜா மாமட பாத்து (H. H. The Aga Khan, Raja of Mahmudabad) முதலியவர்கள் போல மதக்கல்வியைப்பற்றிஊக்கத்துடன்சிலாகித்து அடிக்கடி சொல்லிவந்து அனுஷ்டானத்திலும் கொண்டு வந்தார். அக்காலத்தில் மகமதியக் கல்வி விஷயத்தில் வெகு ஊக்கத்துடனும் கருத்துடனும் உழைத்து வந்த ஹிஸ்ஹைநஸ் அகாகான் அவர்கள் நமது அலிசகோதரர்களுடன் சேர்ந்து பல விடங்களுக்கு சென்று, துகைகள் வசூலித்தார். எவ்விடத்திலும் இவர்களுக்கு வரவேற்பு சிறப்பாய்ச் செய்து ஜனங்கள் துகைகளுமளித்தார்கள். இவ்வாறு செய்தும் கடாசியில் இவர்கள் பிரயத்தனம் வீணே போயிற்று. அரசாங்கத்தாரும் இந்தியாவின் மந்திரிஸ்தானம் வகித்த சிக்ரடரி ஆப்ஸடேட்டும் (Secretary of State for India) மகமதிய யூனிவர் சிட்டியாக அலிகாரை இவர்கள் இஷ்டப்படி செய்ய இடங்கொடுக்கவில்லை.

தங்களுடைய எண்ணம் நிறைவேறும் வரையி லும் கிளர்ச்சி செய்து அரசாங்கத்தார் சர்வகலாசாலே ஸ்தாபனம் செய்யும்படி பல சபைகள் கூட்டி தீர்மானம் செய்தார்கள். மறுபடியும் மறுபடியும் முகம்மதியத் தலைவர்கள் உழைத்த போதிலும் அலிசகோதரர்கள் கொண்ட எண்ணத்திற்கு ஒவ்வாமல் கவர்ன்மெண்டா ரின் கருத்து (terms)க் கிணங்க அவர்கள்கோரிக்கைப் படி கடாசியாக மகமதியர்கள் பெரும்பான் மையோர் சர்வ கலாசாலையடைய ஒத்துக் கொண்டார்கள். அக் காலத்தில் நமது அலிசகோதரர்கள் அடக்குமுறைச் சட்டத்தால் இன்டர்ண்மெண்டில் (internment) அடைபட்டிருந்ததால் தங்கள் எண்ணத்தை வெளி யிடக் கூடாதவர்களாய்ப் போய் விட்டார்கள்.

# அத்தியாயம் 8.

## முகமத் அலியின் பத்திரிகைகள்.

இவர் கல்கத்தாநகரத்தில் தனது 'காமரேட்' என்னும் பத்திரிகையை வெளிப்படுத்தியதையும், கல்கத்தா நகரம் விட்டு டில்லியை வைஸராய் பிரதான நகர மெனக் கொண்டு கவர்ன்மெண்டு அங்கு சென்றதும், முகமத் அலியும் டில்லிக்குச்சென்று தனது பத்திரிகையை அவ டமிருந்து வெளிப்படுத்திவந்தார் என்ற விஷயத்தையும் முன்னொரு அத்தியாயத்தில் கூறினோம்.

முகமத் அலி தனது மதத்தார்களது குறைகளை எடுத்துக் காட்டவும் பொதுவாக இந்திய விஷயங்களை பிரசுரம் செய்யவும் அவைமூலம் அரசாங்கத்தார் தங் களது அறிவை அவைகளில் செலுத்தவேணு மென் னும் அவாவினால் இந்த 'காமரேட்' என்னும் பத்திரிகை வெளியிடப் பட்டதால் அது ஆங்கிலேய பாஷையி லேயே பிரசுரிக்கப்பட்டது.

நாளுக்குநாள் முகமத் அலி பத்திரிகை மூலமாகவே தான் இந்தியர்களையும், முக்கியமாய்த் தன் மதத்தினர்களையும் ஆட்சிமுறையில் பயிலச்செய்ய வேணுமென்று கண்டுகொண்டார். தங்கள் மதத்தினர்களுக்கு தாய்பாஷையிலேயே ஒருபத்திரிகை யியற்றி அதன் மூலம் யாவரும் எளிதில் பயனடையுமாறு எண்ணி "ஹம்டார்டு" (Hamdard) என்னும் பத்திரிகை ஒன்றை உர்து (Urdu) பாஷையில் நடத்த ஆரம்பித்தார். உர்துபாஷையில் தேர்தலடைந்த பல நிபுணர்களை உதவியாகக் கொண்டு தன் அஸௌகரியத்தையும் கவனியாமல் 'ஹம்டார்டு' என்னும் பத்திரிகையை நடத்தி வரவே, அதுவெகு பேர்களால் படிக்கப்பட்டது. உர்து பாஷையில் வெளியிடப்பட்ட பத்திரிகைகளில் இதற்கு இருந்த சந்தாதார்கள் தொகைபோல வேறு ஒன்றுக்கும் இருக்கவே இல்லை. 1913-ம் வருஷம் முதற்கொண்டு இந்த ஹாம்டார்டு பத்திரிகை ஒவ்வொரு மகமதிய இல்லத்திலும் பரவ ஆரம்பித்தது. பத்திரிகைக்கு வேண்டிய ஆசிரியர்கள் போதுமானபடி யிருந்ததால் முகமத் அலி யிப்பத்திரிகைக்கு அதிகமாய் எழுதிவந்ததாக தெரியவில்லை. ஆயினும் பொது விஷயங்கள் அப்பத்திரிகை வாயிலாக வெளிப்படுவனவை உதவி ஆசிரியர்களுடன் கலந்து ஆலோ

சித்து கருத்துக்களை வெளியிட்டு வந்தாரென்பது விளங்குகிறது. காடாசியாக இந்த பத்திரிகை நின்று விட்டதின் காரணத்தை பின்னால் கூறுவோம்.

---

# அத்தியாயம் 9.

## பொது விஷயங்களில் தலையிடல்.

### (1) கான்பூர் மாஸ்க்கு ஸமாசாரம்.

1913-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் வெளிவந்த பத்திரிகைகளில் இப்பெயர் புனைந்து வெளிவந்த விஷயங்களும், பின்னால் முகமதியர்கள் பொதுவாகவும் முகமத்அலி முக்கியமாகவும் கிளர்ச்சி செய்ததும், பிறகு இந்தியர்களிடத்தில் நல்ல எண்ணத்துடன் இருந்து, நல்ல பெயர் வாங்கிக் கொண்டு வைஸராய் ஸ்தானத்தை வகித்து வந்த லார்டு ஹார்டிஞ்சு பிரபு வாலே இதற்கு உண்டான பைசலே செய்யப் பட்டதுமான விஷயத்தை நாம் மறக்கவில்லை யென்று நம்புகிறோம். முகமத் அலியின் சரித்திரத்துடன் அது கலந்திருப்பதால் அவ்விஷயத்தை இங்கு சொல்ல வேண்டியது முக்கியமாயிற்று.

கான்பூரில் உள்ள மாச்லிபஸார் என்னும் இடத்தின் வழியாக ஒரு புது ரோடு போட வேண்டி யிருந்

தது. அந்த ரோடு போடுங்கால் கான்பூர் பள்ளி வாசலின் ஒரு பாகம் குறுக்கிட்டது. அப்பாகத்தை லாண்டு அக்விஸிஷன் ஆக்டின் (Land Acquisition Act) மூலம் எடுக்க வேண்டி வந்தது. கான்பூர் முனிசிபாலிட்டியார் இதற்கென்ன செய்வதென்று கலக்கம் கொண்டார்கள். முனிசிபால் அதிகாரிகள் பள்ளி வாசல் பஞ்சாயத்தார்கள் (Trustees) பலரை கண்டு கலந்து கொண்டார்கள். பஞ்சாயத்தார்கள் சிலர் தங்கள் பள்ளிவாசலில் தொழப்படும் ஆண்டவரை விட உத்தியோக முறையில் தொழப்படும் உதித்யோகஸ்தர்களுக்கு கோபம் வராது காத்துக் கொள்ள எண்ணினார்கள். இது அறிந்து முனிசிபாலிட்டியார் பள்ளிவாசல் பாகத்தை பொது ஜனவிஷயத்துக்கு (For Public Purpose) எடுத்துக் கொள்ள அமுல் நடத்த ஆரம்பித்தார்கள். இவர்களது எண்ணம் வெளிப்பட்டவுடன் வெகுஜனங்கள் தங்கள் மதத்துக்கும் தங்களது பள்ளி வாசலுக்கும் கெடுதி வரும் என்று பீதி யுண்டாகி ஆக்ஷேபித்தார்கள். இவர்களுடன் பல பெரிய மகமதிய பிரபுக்களும் சேர்ந்து ஆக்ஷேபனை செய்தார்கள். அதிகாரிகளின் முடிவுக்கு முன் ஜனங்களின் ஆக்ஷேபனைகள் நிற்க முடியவில்லை.

பள்ளி வாசலின் ஒரு பாகம் எடுத்துக் கொள்ளப் பட்டது. மகமதியர்கள் ஆக்ஷேபிக்கவும் சர்க்கார் போலீஸ் உத்தியோகஸ்தர்களையும் சேவகர்களையும் உதவி கொண்டு பள்ளி வாசலின் பாகம் இடிக்கப்பட்டு ரோட்டுடன் சேர்க்கப் பட்டது.

அதிகார வலிமையினல் இவ்வாறு தேவஸ்தலம் மனிதனுடைய உபயோகத்துக்கு பிரயோஜனப் படுமாறு இடிக்கப்பட்டு சேர்க்கப் பட்டவுடன் மகமதியர்களுக்கு உண்டான வருத்தத்துக்கு அளவேயில்லை. இது நடந்தது 1913ம் வருஷம் ஜுலை மாதம் 2ம் தேதி. 1858ம் வருஷம் நவம்பர் மாதம் 1ம் தேதி மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மகாராணியால்(Queen Victoria of Blessed Memory) பிரசுரம்செய்யப்பட்ட பிராக்ள மேஷன் (Proclamation) என்னும் பட்டயத்தின் பிரமாணத்துக்கு விரோதமாக அதிகாரவர்க்கத்தினர்கள் பலாத் காரமாய் மதஸ்தலத்தின் அமைப்பைக் கெடுத்து பள்ளி வாசல் பாகம் ரோட்டின் பாகமாகச் சேர்த்துவிடவே கிளர்ச்சிக்கு காரணம் ஏற்பட்டது. இந்தியா முழுவதும் பல விடங்களில் கூட்டங்கள் கூட்டி கண்டனத் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

மகமதியர்களின் விஷயமான காரிய மாயிருந்த போதிலும் ஹிந்துக்கள் எல்லாரும் மகமதியர்களின் வருத்தமான நிலைமைக்கு அனுதாபம் காட்டினார்கள். மகமதியத் தலைவர்களும் ஹிந்துக்கள் இவ்விஷயத்தில் நடந்து கொண்ட மாதிரிக்கு நன்றியறிதலை காட்டினார் கள். இக்காரணமும் மகமதிய இந்துக்களின் ஐக்கியத் துக்கு உதவிய தென்றே சொல்ல வேண்டும்.

பள்ளி வாசலின் பாகம் பாதை வெளியாக இடிக் கப்பட்டு மாறு தலடைந்த ஒரு மாதத்துக் கெல்லாம், கான்பூரில் இருந்த மகமதியர் எல்லோரும் அதிகாரி களின் பலாத் காரமான இக்காரியத்துக்கு யாது செய்யலாம் என்று ஆலோசித்து ஒரு பெரிய கூட்டம் கூடினார்கள். இக்கூட்டத்தில் உபந்நியசித்தவர்கள்ஸாத் வீகத்தைக் கைக்கொள்ளும் படியான மாதிரியாக கோடி காட்டினார்கள். அக்கூட்டத்தில் அருமையான பிரசங் கங்களையும் கிளர்ச்சியையும் கேட்டு ஆவேசங் கொண்ட மகமதிய இளைஞர் பலர் நேரே பள்ளி வாசல் வந்து செங்கல்களை தங்கள் கைகளாலேயே ஒன்றின் மேல் ஒன்றாக இடிக்கப்படாத முன் இருந்த நிலைமை போல அடுக்கினார்கள். சுண்ணாம்பு இல்லாமலே சுவர்

எழுப்பினர்கள். இதை கண்ணுற்ற அதிகாரிகள் என்னென்னவோ எண்ண ஆரம்பித்தார்கள். தங்கள் அதிகார வர்க்கத்துக்கும் கனத்துக்கும் பின்னம் வந்துவிடுமோ என்று பயப்பட்டார்கள். உடனே அவர்களது கருவியான போலீஸ் படையை அனுப்பி, பள்ளி வாசல் பக்கத்தில் கூட்டமாய் இராமலிருக்கும்படி கலைத்துவர உத்தரவளித்தார்கள். தற்காலத்து ரீதிப்படியே போலீசாரும் நடத்திக் கொண்டார்கள். அதாவது தங்களது வீரத்தையும் கவுரத்தையும் கவனித்து, உடனே அவடம் யாரும் ஓடாமல் இருந்ததால் தங்களாயுதமான துப்பாக்கியை உபயோகித்தார்கள். சுட்டார்கள். அதுவும் போரு தென்ற எண்ணத்துடன் சனியனல் குத்தினர்கள். அவ்விடம் ஜனங்கள் யாரும் இல்லை. அவடம் கிடந்தவர்கள் இறந்தவர்களும் காயப்பட்டவர்களுமே. அதிகார நெருப்புப் பறந்தது. பலபேர்கள் கைது செய்யப் பட்டார்கள். கணக்கற்ற நியாயவாதிகளும் வந்து ஜயிலில் இருக்கிற 'குற்றவாளி'களுக்கு ஆஜராக தயாரானர்கள். வெகு இளைஞர்களும், 'குற்றவாளி'களாய் இருந்து இளைஞர் என்று கூறப்பட்ட காரணத்தால் விடுதலை யடைந்தார்கள். இவர்கள் குற்றங்களில் முக்கியமான குற்றம் 'கலகஞ்

செய்தல்' (Rioting) என்றது. சட்டத்துக்கு விரோத மான காரியங்களை செய்த வர்களென்றும் அவர்களை சாதாரண ஜனக்கூட்டத்திலிருப்பின் ஜனக்ஷேமத்துக்கு விரோதம் செய்வார் களென்றும் சொல்லும் படியான காரியம் அவர்களில் யாரேனும் செய்ததாக தெரிய வில்லை. அவர்கள் பேரில் வெகு கொண்டாட்டத் தோடு வழக்கு தொடுக்கப் பட்டது.

பள்ளி வாசல் பஞ்சாயத்தார்களில், அதிகார வர்க் கத்தார்களது எண்ணத்தையும் காரியத்தையும் ஆமோ தித்தவர்களும்கூட இதுவெகு தொல்லையில் முடிவாயா யிற்றென்றும் இச்சங்கடம் முடிவடைய மார்க்கம் தேட வேணு மென்றும் எண்ணினர்கள்.

பலர் முகமத் அலியைக் கண்டு அதிகாரிகளின் காரியம் அநீதியென்றும் அதைப்பற்றி கிளர்ச்சி யெடுத்து வெற்றி கொள்ள வேணுமென்றும் வற் புறுத்தினர்கள். தனது பத்திரிகையில் இக்காரியம் சம்மந்தமாக யாதொரு கிளர்ச்சி செய்ய அவசிய மிரா தென்றும், ஒரு தேவஸ்தலத்தை யிடித்துச் சேர்க்க நாஸ்திகன் கூட யோஜிக்க மாட்டானென்றும் அப்

போது லெப்டினண்டு கவர்னராயிருந்த ஸர் ஜேம்ஸ் மெஸ்ட்டன் மற்ற அதிகார வர்க்கத்தினர் போலல்லாது இந்திய நாட்டார்களிடம் அனுதாபத்துடன் அன்பாயு மிருப்பவ ரென்றும் அவர் இக்கொடிய காரியத்துக்கு இடங் கொடுக்க மாட்டாரென்றும் எண்ணி தனது பத்திரிகையில் கூட வெகுகாலம் இக்கலவரையைப்பற்றி முகமத்அலி எழுதாமல் இருந்தார். ஆயினும் முகமத்அலி கவர்னருக்கு தனிமையாக இது விஷயத்தைப்பற்றி எழுதிக் கொண்டிருந்தார். பிறகு முகமதியபிரபுகள் எல்லோரும் சேர்ந்து லெப்டினன்டு கவர்னரிடம் சென்று கூட்டமாய் கண்டு கொண்டார்கள். இது விஷயமாய் இவர்களுக்கு லெப்டினன்டு கவர்னர் பதிலளித்தது திருப்தியுள்ளதாயில்லை. இவ்விஷயம் முழுவதையும் முகமத் அலி கவனித்தார். இனி மேல் தான் சும்மாய் இருந்தால் நன்றில்லையென மதித்தார். காரியம் சித்திக்கும் வழியைநாடி வேலைசெய்ய புறப்பட்டார். இந்தியாவில் எவ்வித விஷயங்களில் கிளர்ச்சிசெய்யினும் அது அதிகாரவர்க்கத்தினரால் மதிக்கப்படுவதில்லை யென்றும், இவ்வதி காரவர்கத்தினருக்கு காரண பூதமாயுள்ள சீமை இந்தியா ஆபீஸும், மந்திரியும், தங்களை நம்பின இனத்தார்களான இந்திய

அதிகார வர்கத்தினர்களின் பேச்சையே நம்பிவிடுகிறார் களென்றும் அவர்கள் செய்ததே சரியென்று சாதிக் கிறார்களென்றும் இந்திய கிளர்ச்சி அக்காலத்து விதப் படி செய்வது பிரயோஜன மற்றதென்றும் முகமத் அலி கண்டு கொண்டார்.

ஆதலின் உடனே சீமையில் மந்திரிமார்களுக்கும் பொது ஜனங்களுக்கும் இது விஷயத்தைத் தெரிவித்து குறைகளை தீர்க்கவேண்டி ஸயத்வஸீர் ஹாசன் (Syed Wazir Hasan) என்றவருடன் முகமத் அலி சீமையை நாடி புறப்பட்டார். இவர் தாம் போகும் விஷயத்தைக் கூட ஒருவருக்கும் தெரிவிக்கவில்லை. தெரிவித்தால் அச் சுச் சட்டத்தின் முறையைக் கைக்கொண்டு தன்னு டைய பத்திரிகைக்கு ஏதேனும் கெடுதல் வருமாறு அதிகாரவர்க்கத்தினர் ஏற்பாடு செய்து தடை ஏற்படு மென்று அவருக்கு எண்ணம் உண்டாயிற்று.

இங்கிலாண்டு சென்றதும் அவ்விடத்தில் இருந்த ஜனங்களும் பத்திரிகைகளும் இந்தியாவில் நடந்த விஷ யம் ஒன்றும்சரிவ ரத்தெரிந்துகொள்ளவில்லையென்றும் பள்ளிவாசல்பாகம்இடிபட்டசமாசாரமும்அவ்வாறுஇடி

ப்பட்ட ஒருமாதத்துக்கு பிறகு, கிளர்ச்சியின் சமாசாரத்
தின்சார்பாகபல இந்தியர்கள் காரணமின்றி சுடப்பட்ட
சமாசாரமும் நடந்தபடி அவர் கள்காதில் எட்டவில்லை
யென்று முகம தலி வஸீர்ஹாஸன் தெரிந்துகொண்
டார்கள். அவ்விடம் பிரஸ்தாபமானது என்னவென்றால்
சில அயோக்ய யெண்ணங்கொண்ட ஈரமில்லா 'கலகக்
காரர்'கள் சட்டங்களுக்கு மீறி போலீஸ்காரர்கள் மண்
டையை உடைத்து விட்டார்கள்" என்பது மட்டுமே!
இங்கிலாண்டில் பிரிவி கௌன்சிலில் இருக்கும் ரைட்
ஹானரபில் அமீர்அலி (Ameer Ali) கூட இவர்களுடைய
எண்ணத்துக்கு ஒத்து இருந்ததாகவும் இவ்விரு மகமதி
யதலைவர்களின் காரியங்களுக்கு அங்கு வேண்டிய உத
விசெய்ததாகவும் தெரியவில்லை. இவ்விஷயமும், ஜனங்க
ளின் இந்திய நிலைமை அறியாமையும், இவர்களை வெகு
கஷ்டத்துக்குள்ளாக்கின. ஆயினும் இவர்கள் பலபிரபுக்
களுக்கும் இந்திய விஷய சம்மந்த முள்ளவர்களுக்கும்
பலவாறு எடுத்துரைத்துவந்தார்கள். சிலர் இவ்விஷயத்
தில் தங்களாலானவரை உதவி புரிவதாக வாக்களித்
தார்கள். பல கூட்டங்களில் முகமத் அலி பிரசங்கம்
செய்தும் உபந்நியாஸம் செய்தும் வந்தார். ஆயினும்
போன விஷயம் முற்றிலும் திருப்தியுடன் ஆங்கிலேய

ஜனங்களால் எற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிய வில்லை. ஆயினும் இந்தியாவில் இதற்கு முன் வடமேற்கு மாகாண மென்றிருந்த ஐக்கியமாகாணத் தின் லெப்டினன்டு கவர்னராயிருந்த ஸர் ஜேம்ஸ் லா டூஷ் (La Touche) தன்னால் ஆனவரை ஸாதகம் செய் வதாக வாக்களித்தார் என்ற பிரஸ்தாபம் மட்டும் பர வியது.

ஆயினும் இந்தியாவில் ஒரு விஷயம், நடந்தது. சட்ட அமுல்ப்படி சர்க்கார் 'கலக்க்காரர்'களைக் குற்றம் சாட்டி விஜாரணை நடந்தது. அப்போது 1913ம் வரு ஷம் அக்டோபர் மாதம் லார்டு ஹார்டின்ஜூ பிரபு கான்பூருக்கு விஜயம் செய்தார். அவர் இந்தியர்களின் பொது நன்மைவிஷயத்தில் ஈடுபட்டவரென்று முன்பே கூறியுள்ளோம். அவர் கான்பூர் பள்ளிவாசல் பாகத்தை முன்பு இருந்தபடி மேல்கட்டடம் வகையறுவை முன்சிபாலிட்டியார் போட்டிருக்கிற ரஸ்தாவின் மேல் தூக்கிகட்டிக் கொடுத்துவிட உத்திரவு அளிப்பதாக வாக்களித்தார். சிறைச்சாலையிலும் ஜாமீனில்லா மல் பந்தோபஸ்த்திலும் (Remand) இருந்த குற்ற வாளிகளின் மேல்நடந்து வந்த நடவடிக்கையை

வாப்சு வாங்கிக் கொள்வதாயும் வாக்களித்தார். ஸர் ஜேம்ஸ் மெஸ்டனும் இதற்கு இணங்கி யிருந்தார் என்றும் தெரிகிறது. வாக்களித்தவாறு கிரியாம்சத்திலும் உண்டாகுமாறு ஹார்டின்ஜ் பிரபு செய்து விட்டார். என்னே! சமீபகாலத்தில் பலவைஸராய்கள் இந்தியாவை ஆண்டு வந்ததில் இவர் பேரை மட்டும் நாம் முக்கியமாக எடுத்துச் சொல்லும்படி நேரிட்டு விட்டது. எப்போதும் அவரது அன்பார்ந்த செய்கையும், சொல்லும், இந்தியர்கள் கௌரவமடைய வேண்டுமென்றும், ஆங்கிலேய குடியரசு (Colonies) நாடுகளில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட ஹிம்ஸையை இல்லாமற் செய்ய வேணுமென்றும், இந்தியா பிரிட்டிஷ் எம்பைருக்கு ஒரு தூண் என்று யாரும் கருதவேணுமென்றும், எண்ணமும் கொண்டவரானதால் இவ்வாறு இவரை நாம் கொண்டாடும்படி ஏற்படுகிறது.

இம்மகான் இவவாறு உரைத்தபடி உத்திரவளித்து பள்ளிவாசல் கட்டடம் கட்டப்பட்டவுடன் மகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் இவர்மேல் உண்டாகியிருந்த பக்தியும் விசுவாசமும் அதிகரித்தன. பொதுஜன அமைதியை அரைக்ஷணத்தில் செய்யக்கூடிய இன்

சொலும் காரியமும் இந்தியர்களுடைய வேதனைக்கு சரியான மருந்தென தெரிந்து கொண்ட அதிகாரிகள் சிலரே.

இங்கிலாண்டு சென்ற முகமத் அலியும் அவர் நண்பரும் இந்தியாவுக்கு திரும்பி வந்தார்கள். கான்பூர் மகா ஜனங்கள் அவர்களுக்கு மரியாதையுடன் வரவேற்பு கொடுத்தார்கள். இவர்கள் தங்கள் தொழிலையும் காலத்தையும் கருதாது பிறர்க்கு உதவிய பெருமைக் குணத்தாலுண்டான திருப்தியுடன் வைஸராயின் அன்பார்ந்த செய்கையால் யுண்டான திருப்தியும் சேர்ந்து சந்தோஷம் அதிகரித்தது. முகமத்அலி தன்மதத்துக்கும் தன்மதத்தினர்களுக்கும் உண்டான குறையை தீர்த்ததற்காக வேண்டி லார்டு ஹார்டின்ஜுக்கு தனது விச்வாஸத்தைக் காட்டி தந்தியு மடித்தார். பல அறிந்தவர்கள் இவ்வாறு வைஸராய் செய்ததன்காரணம் சீமையில் முகமத்அலி செய்த காரியத்தின் பயன் என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படி யிருப்பினும் இருக்கலாம் என்பது நம்துணிபுமே.

## (2) ரெட்கிரஸெண்டு ஸொஸைட்டி துருக்கிச்சண்டையில் காயப்பட்டோர்களுக்கு சிகிச்சை செய்ய உதவிய சங்கம்.

ஐரோப்பா கண்டத்தில் துருக்கியர்கள் படையெடுத்து கடாசியாக 1453-ம் வருஷம் ரோமபுரி ராஜ்யத்தின் கீழ்ப்பாகத்தை ஜெயித்து அக்கால முதல் நாளது வரை கான்ஸ்டான்டிநோப்பிள் (Constantinople) நகரில் இருந்து மகமதிய சுல்தான்கள் அரசு புரிந்து வருகிறார்கள் என்று யாரும் சரித்திர வாயிலாகப்படித்து அறிந்திருக்கலாம்.

இத்துருக்கி சுல்தான் அரசர்கள் துருக்கர்களுக்கு மதவிஷயத்தில் ஆண்டவருக்குப் பதிலாக இவ்வுலகத்தில் இருப்பதாயும் அவர்கள் இகபர விஷயங்களுக்கு தலைவர்களாகவும் அவர்களுடைய பராக்கிரமும் செல்வாக்கும் எவ்விஷயத்திலும் குறையாதிருக்க பாதுகாக்க வேண்டியதென்றும் எவ்வித முகமதியருக்கும் ஒரு கொள்கையாக இருக்கிறது.

எவ்வாறு துருக்கியர்கள் ஐரோப்பா கண்டத்துக்குச் சென்றாரென்றும் எவ்வாறு அவர்கள் பாத்தியதை

பிற்காலத்தில் கொண்டாடப்பட்டதென்றும் கூறுவது இங்கு அவசியம் இல்லை. ஆயினும் நாம் கூறவேண்டியதென்னவெனின் ஐரோப்பாவில் துருக்க ராஜ்யமானது 15-ம் நூற்றுண்டிலும் அடுத்த நூற்றுண்டுகளிலும் வளர்ந்து பிறகு விஸ்தீரணம் குறுகிக் கொண்டே வந்து இப்போது நடந்தயுத்தத்தின்பிறகு வெகு சிறிய ராஜ்யமாயிருக்கிறது. இதன் காரணம் நாம் கூறுவதாயின் அது ஒன்றே. கிறிஸ்தவதேசத்தார்கள் தங்கள் பாத்தியதைக்குட்பட்டது ஐரோப்பா கண்டம் என்றும் ஏனைய மதத்தோர்கள் ஐரோப்பாவில் இருக்க காரணம் இல்லையென்றும் சரித்திரம் படித்தவர்கள் கட்டாயம் அனுமானிப்பார்கள். பிற்காலத்தில் கிறிஸ்தவ தேசங்களில் முக்கியமான ருஷ்யா ஜர்மெனி இட்டாலி பிரான்ஸ் இங்கிலாண்டு முதலியவைகளுக்கு ஐரோப்பாவில் துருக்கிய ராஜ்யம் இருக்க இஷ்டம் இல்லாவிடினும், துருக்கி மட்டும் ஐரோப்பாவில் இல்லாவிட்டால் ஒவ்வொரு கிறிஸ்தவ தேசமும் தனக்குத்தான் கான்ஸ்டாண்டிநோப்பிள் வேண்டுமென்று தங்களுக்குள் அடித்துக்கொண்டு சண்டை செய்வார்களென்றும், அவ்வாறுசெய்ய இடம்கொடாமல் துருக்கி ராஜ்யம் ஐரோப்பா கண்டத்தில் இருப்பது ஸரியென்

றும் பல பிரமுக சரித்திராசிரியர்கள் விளக்கி காட்டியிருக்கிறார்கள்.

ஆயினும் துருக்கி ராஜ்யம் வெகு விஸ்தீரணமாயிருந்ததில் பற்பல சிறிய பாகங்கள் துருக்கியிலிருந்து சண்டையிட்டு ஸுய ஆட்சி பெற்று ஸ்வேச்சையடைந் திருக்கின்றன. பல்கேரியா ரோமேனியா (Bulgaria Roumania) முதலிய சிறிய பாகத்து ஜனங்கள் பொதுவாய் முழுவதும் கிறிஸ்து மதத்தைத் தழுவினவர்கள் என்று சொல்லாமலே விளங்கும். இச்சிறு பாகங்களில் இருந்த கிறிஸ்தவ மதத்தினர்கள் துருக்கியுடன் கிளர்ச்சி செய்து கலகப்பட்டு சண்டையிட்டு துருக்க ராஜ்யத்தி லிருந்து பிரிவு அடைந்து ஸ்வய ஆட்சி பெற்றதில் ஐரோப்பாவில் உள்ள பெரிய கிறிஸ்தவ தேசத்தார்கள் தங்கள் மத விஸ்வாஸம் காரணம் பற்றியோ, அல்லது துருக்கி மீது இருந்த வெறுப்புபற்றியோ, இச்சிறு பாகஸ்தர்களுடன் சேர்ந்தும் அல்லது அவர்களுக்கு அனுதாபம் காட்டியும் வந்தார்களென்பது தேச சரித்திரங்களில் இருக்கும் பிரமாணம்.

இவ்வாறு நடந்த சண்டைகளில் இந்நூற்றுண்டி லும் ஒன்றுஉண்டாயிற்று. நமது சரித்திரத்துக்கு அது சம்மந்தமில்லை யாதலால் அச்சண்டையைப் பற்றி எழுதுவது அனுவசியமே.

ஆயினும் அச்சண்டை காலத்தில் துருக்கிக்கு வெகு துர் அதிர்ஷ்டகாலமாக விருந்தது. அங்கு தேசமும் சற்று க்ஷீணமடைந்திருந்தது. போதுமான சிகிச்சைப் பயிர்ச்சியுள்ளோரும் ஸாதனங்களும்இல்லை. தன்னால் கூடியமட்டும் பல்கர்களுடன் சண்டை செய்தது. பொதுவாய் ஸர்வதேச மகமதியர்கள் பலருக்கு தன் மதத்தையும் தன் காலீபாவையும் கௌரவப்படுத்த எண்ணம் உதித்தது. துருக்கி சேனை போர் முனைக்கு செல்லும் இடங்களிலெல்லாம் ஆஸ்பத்திரி ஸ்தாபித்து காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்ய ஸாதகம் செய்யவேணுமென்ற அவா முகமதலிக்கும் டாக்டர் முக்தர் அஹமத் அன்ஸாரிக்கும் (Dr Mukter Ahmad Ansari) உதித்தது. பால்கன் தேசத்து சில்லரை ராஜ்யங்கள் சேர்ந்து எதிர்த்ததில் துருக்கிக்கு உண்டான கஷ்டத்தை சற்று நிவர்த்தி செய்ய எண்ணி 1912—ம் வருஷம்

அக்டோபர் மாதம் தனது காம் ரேட் என்னும் பத்திரிகையில் இவ்வெண்ணத்தை வெளியிட்டார். எதிர்பார்த்திராத அளவு தொகைகள் வசூலிக்கப்பட்டன. காய சிகிச்சை நிபுணர்கள் பல வாலிபர்கள் தங்களுடைய தறத்துக்குத் தகுந்தபடி வேலை செய்ய முன்வந்தார்கள். டாக்டர் அன்ஸாரி இவ்வைத்தியர்களைச் சேர்த்து ஒரு சங்கமாக ஏற்படுத்திதுருக்கிக்கு போகத் தயாரானர். அப்போது வைஸராயாக விருந்த ஹார்டின்ஜ் பிரபு இவ்வாலிப வைத்தியர்களை நேரில் பார்த்து அவர்களுக்கு ஆசி மொழிகள் கூறி இச்சங்கத்தின் எண்ணம் நன்று நடை பெற வேணுமென்றும் இத்தகைய கைங்கர்யத்தால் இந்தியாவுக்கு பெரும் கீர்த்தியும் கொண்டு வர வேண்டுமென்றும் சிலாகித்தார். அலிகார் காலேஜில் படித்தவர்களும் அக்கூட்டத்தில் இருப்பதைக் கேட்டும் பார்த்தும் சந்தோஷித்தார். எகிப்து துருக்கி (Egypt Turkey) முதலிய விடங்களில் உள்ள ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் தங்களால் கூடுமானவரை இச்சங்கத்தாருக்கு அவ்வவ்விடங்களில் உதவி புரியுமாறு இங்கிலாண்டு அதிகாரிகளுக்கு தந்தி கொடுப்பதாகவும் வாக்களித்தார். 1913-ம் வருஷம்

மாதம் 1-ம் தேதி இச்சங்கத்தினர் துருக்கி சேர்ந்தார்கள். அவ்விடத்தில் தங்கள் எண்ணப்படி யாரும் வியக்குமாறு இச்சங்கத்தார் வேலை செய்து புகழடைந்தார்கள். இவ்வாறு இந்தியாவுக்கும் புகழ் உண்டாயிற்று.

இதற்கு காரணபூதராக விருந்தவர்கள் முகமத் அலியும் டாக்டர் அன்ஸாரியுமே. ஆறு மாதம் பிறகு இச்சங்கத்தார்கள் இந்தியாவிற்கு திரும்பி வந்தார்கள். இச்சங்கத்தாரது சில சாமான்கள் கொஞ்ச காலம் பிற்பாடு நடந்த ஐரோப்பிய ஜர்மனி யுத்தத்தில் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு கொடையாகக் கொடுக்கப்பட்டு அவர்களும் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள்.

## (3) டில்லி முன்சிபாலிட்டியாரும் கசாப்புக் கடைகாரர்களும்.

1912ம் வருஷம் முகமத்அலி டில்லிக்குச் சென்று தனது காமரேட் என்னும் பத்திரிகையை வெளியிட்டு வந்தபோதிலும் அவ்விடம் பொது விஷயத்தில் தலையிடாமலில்லை. இதனால் சிலர் இவரை வெறுக்கவும் ஆரம்பித்தார்கள். ஆயினும் அதைப் பார்க்காமல் ஜனங்களுடைய விஷயத்திலே கருத்தை நாடி வந்தார். டில்லி

முன்சிபாலிட்டியார் ஒரு புதிதான பைலா(Byelaw)உத்திரவு செய்தார்கள். அதாவது கசாப்பு கடைகாரர்கள் தங்கள் ஜீவன நிமித்தம் செய்யும் தொழிலுக்குளப் போதும் உள்ள நிபந்தனைகள் போதா தென்று எண்ணி வெகுகடுமையான நிபந்தனைகள் ஏற்படுத்தி லைசென்ஸ் பெறவேணு மென்று அறிக்கை செய்தார்கள். கசாப்பு கடைகாரர்கள் தங்கள் குறைகளைக் கூறியும் பயனில்லாமற் போயிற்று. தங்கள் கடையை அடைத்து விட்டார்கள்.

தென்னிந்தியாவில் மாம்சம் சாப்பிடுவர்கள் அதிகமாய் வடக்குப்பாகம் போல் இல்லாததால் கசாப்பு கடைகள் சாத்தப் படுவதில் உண்டான கஷ்டம் நம்மவர்களுக்கு முற்றிலும் தெரியகாரண மில்லை.

டில்லியில் ஒரு மாதத்துக்கு மேலே கசாப்பு கடைகள் மூடப்பட்டி ருந்தன. ஜனங்கள் படும் அவஸ்தையையும் கசாப்பு கடைகாரர்களின் அவஸ்தையையும் கண்ணுற்று இவ்விஷயத்தை தலைமேற் போட்டுக் கொண்டு முனிசிபல் அதிகாரி களுடனும் கசாப்பு கடைகாரர்களுடனும் கலந்து ஒரு ஒழுங்கு செய்து

இருதறத்தார்களும் இவருடைய பைசலே ஒத்துக் கொண்டார்கள். இத்தன் மைய காரியங்களால் பொது ஜனங்கள் முகமத்அலியை கொண்டாட நேர்ந்தது.

---

# அத்தியாயம் 10.

## இவரது மதவிச்வாஸம்.

இவர் படித்து வேலை அமர்ந்தகாலத்தில் மகமதியர்களுக்கு பொதுவாக அவ்வளவு மதப்பற்றும் தேச விச்வாஸமும் இருந்ததாகத் தெரியவில்லை. ஒருபொது விஷயத்தில் மகமதியர்களின் கொள்கை என்ன என்று தெரியாத நிலைமையில் இருந்தார்கள்.

தேசீய விஷயத்தில் மகமதிய சகோதரர்கள் இக்காலத்தில் இருக்கும் வைராக்கியத்துடனும் ஊக்கத்துடனும் அப்போது இருந்ததாக தெரியவில்லை. மற்றஜனங்கள் போலவே கான்ஸாயப், கானபகதூர் முதலிய சர்க்காரால் கொடுக்கப்படும் பட்டங்களில் வெகுபிரமை கொண்டுமயக்கப் பட்டிருந்தவர்கள் பலர். மதவிச்வாஸத்தை முன்னிட்டு அதற்கு இடையூறுக விருக்கும் சில்லரை காரியங்கள் அரசாங்கத்தாரால் செய்தாலுங்கூட அதை தடுத்து எதிர்த்து கண்டனஞ்செய்ய வெகுபேர்களுக்கு எண்ணம் உண்டாகவில்லை.

ஒவ்வொரு மதமும் இவ்வுலகில் இருக்க வேண்டி யதற்கும் பரவ வேண்டிய தற்கும் பாத்திய தையுண் டென்றும் இந்தியாவில் வெகு காலமாக இருந்து வரும் ஹிந்து மதத்தின் பேரில் துவேஷம் இருத்தல் பிசகென்றும் இந்து மதஸ்தர்கள் தங்களுக்கு ஸகோதரர்கள் போல் இருக்க வேண்டி தாம் நடந்து வரவேண்டுமென்றும் முகமத் அலியின் கொள்கை.

சிலர் கேட்கலாம், இவர் கொஞ்ச காலம் தம்மதத்தினர்களும் தம் மதமான இஸ்லாமும் பெருமை யடையவேணு மென்ற எண்ணத் துடன் கிளர்ச்சி பிரஸங்கம் முதலியவை செய்து வந்திருக்க, இவர் பிரமதத்துத் வேஷம் இல்லை யென்று எவ்விதம் சொல்லலாம் என்ற கேள்வி கேட்கலாம். இவர் தமது மதம் மதத்தினர்கள் முன்னுக்குவரவேண்டுமென்றுஉழைத்ததுஉண்மையே. ஆயினும் பிறமதமும் பிறமதத்தினர்களும் அடைந்த பெருமையும் கௌரவத்தையும் குறைத்து தன் மதம் உயர் வடையவேண்டு மென்று வேலை செய்யவே யில்லை. பொது ஜனநன்மை விஷயத்திலும் ச்வதேச நன்மை அபிவிர்த்தி யடைவதிலும் கருத்துடன் வேலை செய்யுங் காலத்திலும், பிறமதத்தினர்கள் மேற் கூறிய காரியங்

களில் அதிகப் பயிற்சி யடைந் திருப்பது போல தன் மதத்தினரும் தேற்சியடைய வேணு மென்ற எண்ணத்தால் மட்டும் தன் மதத்துக்கும் தன் மதத்தினர்களுக்கும் ஊக்கம் உண்டாக வேலை செய்து வந்திருக்கிறார்.

தேசீயக்கல்வி புகட்ட வேண்டும் என்ற விஷயத்திலும் இவர் அவரவர்மதக்கல்வியையும் போதித்து கற்றதன் பயன் இத்தேசத்து விவகாரங் களை இத்தேசத்தார்களே பார்த்து வரும்படியான விதத்தை நாடவேணுமென்று இவர் கருதி யிருக்கிறார்.

1906ம் வருஷத் துக்குப் பிறகு பொது வாய் மகமதியர் களிடம் அதிக விச்வாஸம் காட்டி மகமதியர்களின் படிப்பு ஆதரிப்பு முதலிய விஷயங்களில் உதவி செய்த இந்தியா கவர்ன்மென்டாருக்கு பல தேச பக்தர் கள் கூட இவ்வாறு மகமதியர் களுக்கு வித்தியாசமான ஆதரவு காட்டினுல் எல்லாவிஷயத்திலும்தாங்களே முதன் மையடைந்து மற்ற மதத்தினர் களுக்கு கெடுதல் மகமதியர்கள் செய்து விடுவார்கள் என்று திகிலடைந்து பத்திரிகை வாயிலாகவும் பிரசங்க மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

அவ்வித கிளர்ச்சிக்கும் ஆதரிப்புக்கும் காரணமாக விருந்த முகமத் அலி மேற்கண்டவிதமான பிரசுரங்க ளுக்கும் பிரசங்கங்களுக்கும் சரியான பதில் அளித்தார்.

அதாவது "மகமதியத் தலைவர்கள் இந்த இயக்கத் தால் வேண்டுவது என்ன வென்றால் அவர்களில் பெரும்பாலோர் படிப்பு அனுபோகம் முதலியன இல்லாததால் சமத்துவம் சுயேச்சை முதலிய குணங் களுக்கு அருகர் அல்லாமல் போய்விடும்படி யான நிலை மையைநீக்கி அவர்களுக்கு கல்வி புகட்டி தங்களுடைய எண்ணத்தை தாங்கள் முன்னடைவதில் வைத்துக் கொள்ளச் செய்வதுதான்".

இவ்வாறுள்ள தன்மையை யடைவதற்கு இஸ் லாமின் பெருமையைப் புகட்டவேணுமென்று அவர் எண்ணம். இவ்வாறு அபிவிர்த்தி யடைவதில் அன்னிய மதத்தினர்களும் அன்னிய கொள்கையுடைய வர்களும் வீணாய்ப்பயமடைய காரணம் இல்லை என்று விளக்கி காட்டி யிருக்கிறார்.

இத்தகைய கொள்கையை கொண்டும் இவ்வெண் ணத்தைத் தெரிவித்துந் தான் டிரிப்பொலி, துருக்கி (Tripoli Turkey) முதலிய விடங்களில் மகமதியர்க

ளுக்கு கெடுதல் சம்பவித்த காலங்களில் இந்தியாவிலி ருந்து தொகைகள் வசூலித்து உதவி புரிந்து இருக்கிறார்.

ஆகையால் தன்மதம் பெருமையடைய வேண்டி யதென்று அபிமான மிருந்தும் பிறமதத்தையும் பிற மதத்தினர்களையும் தூஷணை செய்யக் கூடாதென்றும் கிரியாம்சங்களில் காட்டியிருத்தலாலே தான் இவரு டைய கிலாபத்கிளர்ச்சி விஷயமாக பிறமதத்தினர்களும் இவருடன் அன்பு பூண்டு சேர்ந்து உழைத்து வருகி றார்கள் என்று தெரிகிறது.

---

# அத்தியாயம். 11

## இவரது பேசும் திறம்.

இவர் சென்னையில் இரண்டொரு தடவைகளில் உபன்னியாசம் செய்ததை நேரே பல நண்பர்கள் கேட்டிருக்கலாம். வார்த்தைகள் தங்கு தடையில்லாமல் மடை திறந்த கால்போல வருவதைப்பார்த்து அதிசயிக் காதார் இல்லை. ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளதை உள்ளபடி வெகு ஆத்திரத்துடன் கூறும் குணம் இவரிடம் அதிக மாயுள்ளது. இவர் பேசும் போது கேட்கும் ஒவ்வொருவரும் இவருடைய ஊக்கம், அபிமானம், விஷயங்களில் பூராவாக அறிதல், மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லுதல் முதலிய அரிய குணங்களை தெரிந்து கொள்வார். கேட்கும் ஒவ்வொருவரையும் தனக்கு விரோதமான அபிப்பிராய முடையவரா யிருந்தாலும் தன் சார்புக்கு இழுக்கக் கூடிய சக்தியிவரிடம் உண்டு. தன்மனதில் ஒரு விஷ

யம் உண்மை யென்றும் சரியான தென்றும் தன் புத்திக்கு எற்றபடி அறிந்து கொண்டால் அதை தீரத் துடன் எடுத்துச் சொல்லி அப்படிச் சொல்வதால் எவ்வித கஷ்டம் வந்து சம்பவிக்குமானாலும் அதை கரு தாது சொல்லும் வீரத்தனம் இவரிடம் உண்டு. யாதேனும் ஓர் விஷயத்தில் எத்தகையராயினும் ஒரு விதம் கூறும் பக்ஷத்தில் நமக்கென்ன வென்று இராமல் இவர் உடனே அதற்கு பதில் கூறியோ அல்லது பதில் வியாஸம் எழுதியோ எவ்விதத்திலாவது தன் சமாசார மெனக் கொண்டு செய்யும் சுபாவ முள்ளவர். இவரது பிரசங்கங்களை கண்டனம் செய்ப வரும், இவரது அபிப்பிராயத்துக் கிணங்காதவர்களும் கூட இவரது பேசும் தன்மையை சிலாகித்தே சொல்லி யிருக்கிறார்கள்.

---

# அத்தியாயம் 12.

## அடக்குமுறைச் சட்டத்தால் இவர் 'இன்டர்ன்' காப்பில் இருந்தது.

இவர் இஸ்லாம் மதத்தின் பேரில் நல்ல வைராக்கிய மும் பக்தியும் வைத்திருந்தார் என்பது எவருமறிவார். இவர்மீது நடந்துவரும் கேசிலுங்கூட இவர் கொருனைப் பற்றியும் இஸ்லாமைப்பற்றியும் கூறும்விஷயத்தாலேயே இவரது மதப்பற்றும் வைராக்கியமும் விளங்கும். யாரே னும் துருக்கியையும்இஸ்லாம் மதத்தார்களையும்பற்றி ஏதேனும் அவமரியாதையாகவும் அவதூராகவும் பேசி னல்உடனே திடீரென்று வந்துவிடும் இவருக்கு கோபம். ஸரியான பதில் அளிக்காமல் இருப்பதில்லை.

இவ்வாறிருக்க 1914ம் வருஷம் துருக்கி ஐரோப் பாவில் ஜர்மெனிச்சண்டையில் ஆங்கிலேயர்க்கு விரோத மாய்ப் போரில் புகுமுன் இங்கிலாண்டின் பிரதான நக

ரமான லண்டனில் பிரசுரிக்கப்படும் "டைம்ஸ்" என்னும் பத்திரிகையில் துருக்கியைப்பற்றி கேவலமாயும் கிரேக்கருடன்(The Greeks) துருக்கி சண்டைக்குச் சென்ற விஷயமாய் அகௌரவமாயும் கோபமூட்டக் கூடியதாயும் எழுதிவெளியிட்ப் பட்டிருந்தது.

இதைக்கண்ணுற்ற முகமத் அலி மனம் நொந்தது. அந்தபத்திரிகையில் இருந்தஅபத்தங்களையும் அலம்பாவிதங்களையும் வெளியிட்டு கண்டனம்செய்ய தீர்மானித்தார். 1914ம் வருஷம் செப்டம்பர் மாதம் 26ம் தேதி வெளி யிடப்பட்ட 'காம்ரேட்' பத்திரிகையில் இவரது பதில்வந்தது.

இப்பத்திரிகையில் இவரதுபதில் வந்த சுமார் ஒரு மாதத்துக்கெல்லாம் காம்ரேட் 'ஹம்டார்டு' பத்திரிகைகள் பிரசுரித்த அச்சுக்கூடச் சொந்தக்காரருக்கு அதிகாரவர்க்கத்தாரால் ஒருநோட்டீசு அனுப்பபட்டது. அச்சுச்சட்ட நிபந்தனையால் இவ்வச்சுக்கூடச் சொந்தக்காரரால் சிக்கியூரட்டியாக சர்க்காருக்கு கட்டணம் செய்திருந்த ரூபாய் 2000யும், கவர்னர் ஜனரல் இன் கௌன்சில் உத்திரவுப்படி பிரஸ் ஆக்ட்டு (Press Act) 4 (1) பிரிவுப்பிரகாரம் எடுத்துக் கொண்டும் 26-9-1914ம்

தேதியுள்ள' 'காம்ரேட்' பேப்பர் பிரதிகளையும் பரிமுதலும் செய்தாய்விட்டது.

இப்பதில் முகமத் அலி வெளியிட்டதை பலஇந்தியபிரபுக்கள் சட்டத்துக்கு மீறியில்லை யென்றும் இங்கிலாண்டில் இருக்கும் ஒருபத்திரிகை எழிதியதற்கு முறணாக இவர் வெளியிட்டபதிலை சர்க்காரால் பரிமுதல் செய்தது நல்லதில்லை யென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். பொதுவாய் இந்திய இயக்கத்தைப் பற்றியும், தென் ஆப்பிரிக்கா பிலிப்பைன்தீவுகள், பிஜ்ஜித்தீவுகள் (South Africa, Phillippines, Fiji Island) முதலிய இடங்களில் இந்திய கூலிக்காரர்கள் படும் அவஸ்தைகளைப்பற்றியும் வெகுவாய்எடுத்துரைத்து அவைகளுக்கு செய்யவேண்டிய காரியங்களை அடிக்கடி பத்திரிகைகள் மூலம் கண்டனம்செய்து எழுதிவரும் மிஸ்டர் ஸி. எவ். அன்ட்ரூஸ் (Mr. C. F. Andrews) என்பவர் கூட இவர் பதிலில் உண்மையன்றி வேறொன்று மில்லை யென்று கூறியிருக்கிறார். இவர் வெளியிட்டபதிலால் இந்தியாவில் உள்ள எந்தமதத்தினர்களும் அரசாங்கத்துக்கு விரோதமான காரியம் செய்தார் களென்றும் தெரியவில்லை. அப்படி இருக்க இவர் பேப்பரைமேற் சொன்னபடி பரிமுதல் செய்யப்பட்டது.

இக்காலத்தில் முகமத் அலி நீர்ரோகத்தினுல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். 1914ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இங்கிலாண்டு ஜர்மனியுடன் யுத்தத்துக்கு ஆரம்பிக்கும் காலத்தில் முகமத் அலிக்கு படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாதபடி அவ்வளவு அஸௌக்கியமாயிருந்தார். அவருக்குகொஞ்சம் உடம்புஸௌகரியம் உண்டானவுடன் அவரது தர்மபத்தினிக்கு உடம்பு அஸௌக்கியம் எற்பட்டது. இன்னும் இவருக்கு அதிகாரிகளால் இவர் அச்சுக்கூடத்துக்கு எற்பட்ட சிக்யூரிட்டி பரிமுதல் செய்யப்பட்ட விஷயமாய் விவகாரமும் எற்பட்டது. இவர் உடம்பைபார்த்து வந்தடாக்டர் களெல்லாரும் இவர் அதிகவேலைத் தொந்திரவில் தலையிட்டுக்கொள்ளக் கூடாதென்றும் யாதொருவேலையும் செய்யாமல் இருக்கவேணும் என்றும் வற்புறுத்தினுர்கள். ஆதலால் தன்குடும்பத்தோடு டில்லியைவிட்டு தன்னூர்போக நினைந்து தனது தமயனுர் ஷௌகத் அலியை தன் ஹாம்டார்டு பத்திரிகை பிரசுரவிஷயத்தை மேல்பார்த்துக் கொள்ளச்சொல்லி 1915ம் வருஷம் எப்பிரல் மாதம் வாக்கில் தன்ஊரான ராம்பூருக்கு சென்ருர். அவ்விடம் உஷ்ணம் அதிகமாயிருந்ததால் இவர் உடம்பு நல்லஸ்திதிக்கு வரவில்லை. ராம்பூர் நவா

யும் இவரை முஸ்ஸௌரீ (Mussoorie) என்றும் சௌக்கியஇடத்தில் போய் இருந்து வருமாறு கேட்டுக்கொண்டார். முகமத் அலி அந்த எண்ணங்கொண்டு (Ajmeer) ஆஜ்மீர் சென்று அவடம் ஒரு வைதீக காரியத்தை முடித்துக்கொண்டு முஸ்ஸௌரி போவதற்காக டில்லி வந்துசேர்ந்தார்.

இவர் டில்லிக்குவந்த மறுநாளே டில்லீ சீவ்கமிஷணரால் (Chief Commissioner) இவரையும் இவர் சகோதரரையும் காப்புச்சட்டத்தின்படி இன்டர்ன் செய்ய உத்திரவு பிறந்தது.

யாரும் இத்தகைய உத்திரவை எதிர்பார்க்கவில்லை. ஆயினும் ராம்பூரில் இவர் தேகஅசௌக்கியத்துடன் இருந்த காலத்திலேயே இவர் செய்கையை சர்க்காரால் கண்ணேட்டத்துடன் பார்த்து வரப்பட்டதாக தெரிகிறது. பிறகு அதுயாரும் ராம்பூரில் அறியவே இவரைப்பற்றி ஒவ்வொருவரும் விஜாரிக்க ஆரம்பித்தார்கள். இவர் மீது யாதொரு நடவடிக்கையும் செய்யவில்லை. ஆனல் டில்லிக்குச் சென்றவுடன் முன்பு கூறியபடி இவரையும் மௌலானு ஷௌகத் அலியையும் டில்லிக்கு சுமார் 11 மயில் தூரமுள்ள மாரௌலி

(Mahrauli) என்னும் கிராமத்திற்கு அதிகாரவர்க்கத்தினர் அனுப்பினார்கள். இவர்கள் இருவரும் அன்று வெள்ளிக்கிழமை யாதலால் ஜாமா மசூதிக்கு (Jama Masjid) சென்று தொழச் சென்றவர்களை டில்லியை விட்டு போகும்படி செய்யப்பட்டது. மாரௌலிக்கு இவர்கள் கொண்டு போகப்பட்டார் களானாலும் இவர்களது ஆப்த நண்பர்களும் மற்றோர்களும் டில்லியிலிருந்து ஒவ்வொரு நாளும் சென்று இவர்கள் க்ஷேம சமாசாரம் தெரிந்து வந்தார்கள். அந்தோ! அவவிடம் இருந்து கவர்ன்மெண்டார் இவர்களை லான்ஸ்டௌன் (Lands downe) என்றவிடம் கொண்டு போய் பிறகு சின்டுவாராவுக்கு கொண்டு போய் விட்டார்கள்.

இவர்களை ஏன் இவ்விதம் தங்களூர் விட்டு சுயேச்சை என்பதில்லாமல் காப்புக்குள் வைத்தார் களென்று கவர்ன்மென்டார் காரணமே சொல்லவில்லை. இவர்களாலும் மற்றவர்களாலும் செய்யப்பட்ட எந்தகுற்றமான செய்கைக்கு இவ்விதக்காப்பு உத்திரவு செய்ய எற்பட்டது என்று கேழ்விகேட்டும் அதனால் பயனில்லாது போயிற்று. ஆனால் 1915-1916ம் வருஷத்து டில்லிமாகாணம் ஆக்ஷிரிபோர்ட்டில் (Administration Report)

"பிரிட்டிஷ் கவர்ன்மென்டுக்கு விரோதமாக மகமதிய ஜனங்களின் ஒரு சார்பார் இவர்களது வெறுப்புடன் செய்தகிளர்ச்சியால் கெடுதல் அடைந்து வருகிறதனுல் முகமத் அலியையும் ஷௌகத அலியையும் காப்புவைக்க வேண்டியது அவசியமாயிற்று" என்று எழுதப் பட்டிருக்கிறது.

("......was found necessary to intern Muhammad Ali and Shaukat Ali on account of the bad influence which their bitter propaganda against the British Government was having on a Section of the Muhammadan Community)"

இதன் மூலம்தான் முதன் முதலாக முகமத் அலியும் ஷௌகத் அலியும் காப்பு அடைப்பட்டதின் காரணம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வாயிலிருந்து தெரிந்தது. ஆயினும் எவ்விதம் எந்த மகமதிய சார்பார் (வகுப்பினர்) இவர் காரியத்தால் எப்படி கெடுதல் உண்டாக்கினுர்கள் என்று பயிரங்கமாக பலர் கேட்டும் அதிகார வர்க்கத்தினர் விஜாரணை வைக்கவு மில்லை பதிலும் அளிக்கவில்லை.

இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கௌன்சிலில் (Imperial Legislative Council) பல பிரபல மெம்பர்கள் கேட்டும் சரியான உத்தரம் வரவில்லை. கடாசியாக ஹானரபில் மிஸ்ட்டர் மஷ்ஷருல் ஹக்(Hon. Mr. Mazhar-ul-Haque) இந்திய காப்பு விதிகளால் (Defence of India Rules) தனது மதத்தினர்களை அதிகமாய்ப்பீடிக்கப்பட்டார் களென்றும், இந்தியர்கள் கண்என விளங்கி போற்றிப்புகழப்படும் பெரிய மனிதர்களை காப்பு வைத்திருக்கிற தென்றும் அவர்களுக்கும் எனைய இந்தியர்களுக்கும் இவ்வாறு தாங்கள் அவதிப்படும் காரணம் அறியமுடியவில்லை என்றும் ஒருநியாய முறையுடன் பொறுப்புள்ள நியாயவாதி மற்ற உத்தியோகஸ்தர் மூலம் இவர்கள் குற்றம் யாதென்று விஜாரித்து பரீசீலனை செய்யாது இருப்பது அழகுக்கும் கௌரவத்துக்கும் குறைவு என்றும் இதற்கு குறிப்பாக மகமதியர் களுக்குள் கௌரவமும் மறியாதையும் பக்தியு முள்ள தலைவர்களான முகமத் அலியும் ஷௌகத்அலியும் மௌலானா அபுல் கலாம் அஸாத் (Maulana Abul Kalam Azad) தும் அவர்கள் குற்றம் என்னவென்று அவர்களுக்கும் பிறருக்குந் தெரியாமல் கட்டுண்டிருப்பது மனவருத்தத்துக்

கிடமாயிருக்கிறதென்றும், அவர்கள் செய்த குற்றம் என்னவென்று கவர்ன்மெண்டார் காட்டுவார்களென்றால் இவர்களுக்கு விரோதமாக கவர்ன்மென்டார் பக்ஷத்திலேயே தானும் மற்றவர்களும் இருப்பதாகவும், இன்னும் பலவாராகி கேட்டோரும் படித்தோரும்மனம் உருகுமாறு கவர்ன்மென்டாரை கேட்டுக்கொண்டார்.

அப்போது ஸர்க்கார் தரப்பில் வந்தபதில் வெகு சாமர்த்தியமாய் இருந்தது. நிச்சயமாய் இன்னது தான் இவ்வாறு இப்போது இவர்கள் செய்தார் என்று சொல்லாமல், இவர்கள் வெளிப்படையாயும் விரோதமாயும், பிரஜைகளுக்குள் விரோதம் உண்டாகுமாறு பேசியோ எழுதியோ அல்லது அமைதியற்றுப் போகச்செய்தோ அல்லது அரச விரோதிகளுடன் சேர்ந்து இருப்பதோ, அல்லது இன்னும் என்னசெய்திருப்பார்களோ என்று ஒவ்வொருவரும் அவரவர் நிலைமைப்படி யூகிக்கவேண்டி வரக் கூடியபதிலாய் இருந்தது.

இது விஷயமாக பலபேர்கள் பலமுறை பலஇடங்களில் பலவிதமாகக்கேட்டும் சரியான காரணம் வரவில்லை. ஜனங்களுக்கு பொதுவாக சந்தேகமும் அதிருப்தியும் உண்டாகவாயிற்று. சண்டைவிஷயமாகவோ

அல்லது வேறு எக்காரணம்பற்றியோ காப்புக்குள் வைக்கப்பட்ட இந்திய சிறிய பெரியமக்கள் இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்காக ஆயிற்று.

இப்படிஇருந்து வருகையில் சென்னையில் அடையாறு (Adayar) என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தியாஸாபிகல் சொஸைட்டி அக்கிராசனாதிபதியான(President of the Madras Theosophical Society) மிஸஸ் பெஸன்ட்டும்,மிஸ்டர் அரண்டேலும்,மிஸ்டர் வாடியாவும்(MrsBesant,Mr.Arundale,Mr.Wadia) சர்க்காரால் காப்புக்குள்வைக்கப்பட்டிருந்தார்கள்.இவர்களை விடுவிக்கவும் பலமீட்டிங்குகள் கூடி தீர்மானங்கள் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டது. அலி சகோதரர்கள் விஷயமும் அத்துடன் சேர்க்கப்பட்டது. இவ்விதம் கிளர்ச்சி அதிகமாய்க் கொண்டுவரும்போது இத்தேசத்தில் அரசாங்க விஷயத்தில் அவசியமாகவேண்டிய சீர்திருத்தங்கள் சம்மந்தமாய் இந்தியாவுக்கு வருவதாக இந்தியாவின் கிக்கிரட்டரி மிஸடர் மாண்டேகு (Mr. Montagu) தெரிவித்தார். அக்காலம் வைஸராயாகவிருந்த லார்டு செம்ஸ் போர்டு (Lord Chelms ford) மிஸ்டர் மாண்டேகு வரும் காலத்தில் இவ்வித

கிளர்ச்சி யில்லாமல் அமைதியாய் இத்தேசம்இருக்க வேணும் என்று இந்தியத்தலைவர்களை கேட்டுக்கொண்டார். அச்சமயம் லெஜீஸ் லெட்டிவ் கௌன்சிலில் மிஸ்டர் ஜின்னு (Hon. Mr. Jinnah) மிஸ்டர் மாண்டேகு இந்தியா வரப்போகும் விஷயத்தை அனுஸரித்து இந்தியாவில் மிஸஸ் பெஸன்டு முதலியவர்களை காப்பில் வைத்ததாலுண்டான அதிருப்தியை உத்தேசித்து கவர்ன்மெண்டரர் அவர்களை விடுதலைசெய்ய எண்ணம் வைக்கிறார்களா வென்று கேட்டார்.

அப்போது ஸர் விலியம் வின்ஸென்டு சண்டை முடியும் வரை அரசாங்கமுறைக்கு விரோதமாகவும் கெடுதலாகவும் ஒருகாரியமும் செய்யமாட்டார்களென்று கவர்ன்மெண்டாருக்கு திருப்திகரமாய் தோன்றினுல் இவர்கள் எல்லாரையும் விடுதலை செய்வதாய்க் கூறினுர்.

இன்னொரு கேழ்விக்கு கவர்ன்மெண்டார் அலி சகோதரர்களின் விடுதலை விஷயமாயும் விசாரித்துக் கொண்டு யோஜித்து வருவதாக பதில் சொன்னுர்கள்.

நாம் இப்போது 1917-ம் வருஷம் செப்டம்பர் மாதம் சமாசாரம் கூறுவோம்.

செப்டம்பர் மாதம் 7-ம் தேதி மிஸ்டர் அப்துல் மஜீத் (Mr. Abdul Majid) என்ற போலீஸ் டிப்டி சூபி ரென்டென்டு ஸிம்லாவிலிருந்து (Simla) சின்டுவா ராவுக்கு ஸர்சார்ல்ஸ் கிளேவிலெண்டு (Sir Charles Cleveland) கைக்குறியுடன் எழுதிய ஜாமின் (Under-taking) நிபந்தனையுடன் வந்து அலி சகோதரர்களுக்கு காட்டி, இந்நிபந்தனையை ஒப்புக் கொள்ள இஷ்டமா வென்று கேட்டார். அந்நிபந்தனையாவது சண்டை முடியும்வரை எக்காரியமாயும் அரசவிரோதிகளுக்கு சாதகமாய்க் கருதக்கூடிய எவ்வித காரியமும்செய்யாம லும், வியாஸம் எழுதாமலும் பேச்சு பேசாமலும் இருப்போ மென்றும், அரசநேசர் கக்ஷிகாரருக்கும் நேசர்களுக்கும் விரோதமாக யாதொரு காரியம் செய் யாமலும் இருப்போம் என்றும், ஜனங்களின் அமைதி யையும் க்ஷேமத்தையும் விரோதிக்கும் எவ்விதக் கிளர்ச் சியும் செய்யாமல் இருப்போம் என்றும் இன்னும் சில நிபந்தனைகளுடன் எழுதவேணுமென்று கண்டிருந்தது.

உடனே அலி சகோதரர்கள் இதற்குபதிலாக தாங்கள் எக்காலத்திலும் கடவுளுக்கு பயந்துநடக்கும் முஸ்லிம்கள் என்றும், கொரானில்இருக்கும் விஷயப்

படி நடந்து கொள்ளுகிறவர்கள் என்றும், இஸ்லாமுக்கு விரோதமாக ராஜவிரோதிகளுக்கு சார்பாகயாதும் செய்யவில்லை யென்று எழுதிக்கொடுப்பதாயும், எவ்வித நிபந்தனைக்கு உட்பட்டாலும் அந்நிபந்தனை தங்களுடைய மதவிஷயகாரியத்துக்கும் அனுஷ்டானத்துக்கும் குந்தகமில்லாவிடில் ஒத்துக்கொண்டு அதன்படி நடப்பதாயும் மற்றும் கண்டு எழுதிக்கொடுத்தார்கள்.

இதற்கு இரண்டு தினங்களுக்குப் பின் கவர்ன்மெண்டாரின் வேண்டுதல் பேரில் மாமுடபாத் ராஜாவும் சிண்டுவாராவுக்கு வந்து இவர்களுடன் பேசி இவர்கள் விஷயமாக வெகு திருப்தியுடன் திரும்பினார். இவர் அங்கு செல்வதற்கு சற்று முன்னதாக ஒரு ஸி. ஐ. டி. (C. I. D.) உழவு போலீஸ் உத்தியோகஸ்தர் அங்கு சென்று போனதாகத்தெரிந்து வியஸனித்தார்.

ஆனால் மிஸஸ். பெஸன்டு வகையறுவை விடுதலை செய்த காலத்தில் இவர்களை விடுதலை செய்யவில்லை. இது விஷயமாக கேழ்விகேட்ட மிஸ்டர் ஜின்னாவுக்கு 26. 9. 1917ல் ஸர். வில்லியம் வின்ஸெண்டு பதிலளித்ததாவது: அலிசகோதரர்கள் கட்டுண்டிருப்பதற்கு காரணம் அரசவிரோதிகளுக்கு அனுதாபம் காட்டியும்

க்ஷேமத்துக்கு விரோதமாக காரியம்செய்து இருப்பதும் தவிர இவர்கள் விஷயமாக விஜாரணையிலும் ரிகார்டுகளையும் பார்த்ததில் முன் செய்துவந்த கொள்கையிலிருந்து இவர்கள் சற்றும்மாறுதல் அடையவில்லையென்றும் கவர்ன்மெண்டார் இவர்கள் விஷயத்தில் திருப்தியாகவில்லையென்றும் பதில் அளித்துவிட்டார்.

முந்திய ரிகார்டுகள் என்பது ஆப்கானிஸ்தான் அமீருக்கும் (Amir of Afganistan) லக்நோவில் உள்ள முஸ்லீம் மதத்தலைவரான வராங்கி மஹல்(Farangi Mahal) என்பவருக்கும் எழுதினதாயுள்ள இரு கடிதங்களென்று தெரிய வருகிறது. அவைகள் வெகு கடுமையுடனும் ராஜவிரோதத்துடனும் எழுதியிருப்பவைகளாக சொல்லிக் கொள்ளப்பட்டது. முதல் கடிதம் பர்ஷியனி (Persian)ல் முகமத் அலியாலும் மற்றொன்று ஷௌகத் அலியாலும் எழுதப் பட்டிருப்பதாகவும் சொல்லப் பட்டது.

இக்கடிதங்கள் விஷயம் தங்கள் காதில் விழுந்தவுடன், அலிசகோதரர்கள் திடுக்கிட்டு மாமுடபாத் ராஜருக்கும், மிஸ்டர் ஜின்னவுக்கும், மிஸ்டர் மஜ்ஷர் உல்ஹக் எனபவருக்கும்தாங்கள் அவ்விதமாகயாதொரு

கடிதமும் எழுதவில்லை யென்றும் கவர்ன்மென்டார் அக் கடிதங்கள் தங்கள் வசம் இருப்பதாக சொல்லுவதை காட்டட்டு மென்றும், தந்திமூலம் தெரிவித்தார்கள். இதற்கு மேல் ஒன்றும் சம்பவியாமல் இருந்ததை யுத் தேசித்து முகமத்அலி அக்டோபர் மாதம் ஸர்விலியம் வின்ஸென்டுப் பிறகு ஸ்தானம் வகித்த ஸர்ஜேம்ஸ்டு போலே (Sir James Du Boulay) என்பவருக்கு இது விஷயமாக கடிதமும் எழுதினர். அதில் கேட்டுக் கொண்டபடி இவர்கள் எழுதியதாகச் சொன்ன கடிதங் களை காட்டினதாகத் தெரியவில்லை.

கடாசியாக சண்டைமுடி வடைந்து ஜயம் அடைந் தபின்னர் நமது அரசர் ராஜாங்க. விஷயமாய் சிறையி லடைபட்ட எல்லோரையும் விடுவிக்குமாறு இஷ்டப் பட்டு தனது கோரிக்கை வெளியிட்டதன் மூலம் நமது அலி சகோதரர்களும் காப்பை நீங்கி வெளி வந்தார் கள்.

# பிற்பாகம்.

இவ்வலி சகோதரர்கள் காப்பிலிருந்து வெளி வந்தமேல் சண்டையின் உடன்படிக்கைப்படி துருக்கி ஸுல்தானின் வன்மை குறைவுற்று சிறுமை யடைந்த தாக இயக்கத்தை யடைந்ததும், கிலாபத் விஷயமாய் இவர் ஊர்ஊராய்ச் சென்று சொல்லியதும், பிறகு இங்கிலாந்துக்கு சென்று கிலாபத் விஷயத்தையும், மகமதியர் மனநிலைமையும் மந்திரி பிரபுக்கள் முதலி யோருக்கு அறிவிக்க பல உபன்னியாஸங்கள் அங்கு செய்ததும், அவை யெல்லாம் பிரயோஜனமற்று இந் தியாவுக்கு திரும்பி வந்து, பஞ்சாப் மாகாணத்தில் ஸம்பவித்த அக்கிரமத்தையும் அவமானத்தையும் நினைத்து இனிமேல் நற்கதி யடைவதாயின் ஜனங்கள் தாம்தாமே அதற்கு வேண்டிய ஸாதகங்கள் செய்ய வேணுமென்று எண்ணினதும், இந்தியாவில் உண் டான குறைகளை தீர்க்க வேண்டி கங்கணம் கட்டி முன் வந்திருக்கும் மகாத்மா காந்தி (Mahatma Gandhi) யுடன் சேர்ந்து அவர் அஹிம்ஸா எண்ணத்துக்கு ஈடுபட்டதும், பிறகு ஊர்ஊராய்ச் சென்று ஸ்வதேச

சாமான்கள் ஆடைகள் உபயோகப் படுத்தி நெசவு யந்திரத்தால் தான் இந்தியா நற்கதியடைய வேணு மென்று பிரசங்கித்ததும், ஒத்துழையாமை என்பதன் அடியாக இருந்ததும், வால்டேரி (Waltair)ல் கைது செய்யப் பட்டதும், கராச்சியில் ராஜாங்க சேனைகளை தங்கள் தொழிலை விட்டு விடவேணு மென்று சங்கம் கூடி தீர்மானம் செய்ததன் குற்றத்திற்கு பிரதம விஜா ரணை யானதும், செஷன்ஸுக்கு கமிட் செய்யப் பட் டதும், அதன் முடிவில் இரண்டு வருஷ கடின சிக்ஷைப் பட்டதும் கூடிய சீக்கிரம் இரண்டாம் பாகமாக வெளி வருமாதலால் சகலஇந்திய தமிழ் சகோதரர் களும் அதை அன்புடன் வரவேற்றி படித்து வருமாறு வேண்டுகிறோம்.

---

# SALE LIST OF ARTICLES.

---

## K. JAGADISAN & Co.,

**Stationers, General Merchants, Etc. Etc.**

**32, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.**

**Sell the foll. at Cheap rates.**

### STATIONERY.

1. Superior glazed square court Envelopes
2. Manilla
3. Writing Bank Paper Pads
4. Blue ruled Bank Paper packets of 100 sheets
5. Silver cross Letter paper
6. Sup. Bank large size note paper

---

**K. Jagadisan & Co**. Triplicane, Madras,

7. Sup. Ivory white note paper,
8. ,, Parchment ,,
9. Glazed plain post cards,
10. ,, Visiting cards
11. Foolscap papers in 8,9, 10, 12 & 14 lbs.
12. Brown papers
13. Asoka Brand Blotters Thick
14, Paper clips
15. Office Tags
16. Am. Star Dating Stamps
17. Br. made Self Inking Stamp pad
18. Floral Puspol Hair oil (B. C. P. W.)
19. Ben. C. P. W. Tooth powder
20. Agaru Perfumes (B. C. P. W.)
21. Eau de cologne
22. Quick curer for Itches, ulcers piles etc.
23. Sealing wax
24. Hose suspenders
25. Sheffield Superior Razors, Safety Razors blades etc.

Currency note cases :—

26. For 1 Re. and 2½ Rs. notes
27. For 10 Rs. notes

28. Leather Belts
29. Chalks Japanese
30. „ American
31. Polished Solid Brass nutcrackers with *fine* steel blade
32. Tooth brushes
33. Safety Pins Rolled Gold English make
34. Mother of Pearl buttons 4 holed for shirts
35. „ hook buttons for coats
36. Best Sheffield make double bladed knives

## WRITING MATERILAS.

37. Waterman's Ideal Fountain Pens
38. Swan Fountain pens
39. „ Safety
40. Black bird Fountain pens
41. Hardware Fountain pens
42. Maharaja Safety „
43. „ Screwtop „
44. Moore's Safety „
45. Alexandra „
46. Nickel clips

47. Pure Silver clips
48. Leather Pouches for Fountain pens
49. Am. Fides Pencils
50. ,, Maharajah pencils
51. Delhi Darbar ,,
52. A. W. Faber's Bavarian Drawing Pencils
53. ,, ,, Blue ,,
54. ,, ,, Red ,,
55. ,, ,, Copying ,,
56. Jap. Copying Sup. Pencils
57. Am. Venus Copying pencils
58. Venus pencil holders
59. Am Red & Blue combined pencils
60. Rowneys "Diana" Blue pencials
61. English make Propelling pencils
62. Am Pencil protectors with rubber tips
63. Genuine Kropp Razors
64. Rubber pieces (English erasers)
65. Rubber bands for holding and tying Records, books etc,
66, Am Pen holders
67. Ink erasers (for removing Inkstains from paper parchments, clothing, lace, linen etc complete in box

68. Swan Fountain Pen Inks
69. Fields ,,
70. Hollidges copying Inks
71. ,, superior Blue Black Ink in bottles
72. Ink Pills Blue black
73. ,, Red
74. ,, Green
75. Relief Nibs, Perrys Nibs, etc.,
76. Black or Red marking crayons

## SCHOOL REQUISITES.

77. Graph Books
78. Exercise Books of all pages ruled and unruled
79. Limp bound in all pages
80. Short hand note books 60 pages Superior Paper with red ruling
81. Pocket note books in various styles.
82. ,, Book case (calico)
83. Vest Pocket Books
84. Observation note Physics
85. Bound note 160 200, 240, 288, 320 pp.
86. Drawing Books
87. Card board

88. Math Insts English make
89. Water colours
90. Am colour crayons
91. Ind ,,

Drawing Pins, Kropp Paste, Safety Razors, spare blades, Chalks, Pens, Pencils, Books etc. at bottom prices.

A TRIAL ORDER WILL CONVINCE YOU.

---

**K. JAGADISAN & Co.,**
**32, Pycrofts Road,**
**Triplicane, MADRAS.**

---

# Athri's Ayurvedic Medicines.

We are selling the following gems of the Indian Pharmacopea with guarantee to return the amount if you get no benefit :—

1. "Ointment" A certain cure without operation for Piles, Sores, Sinus, Fistula, Syphilitic and obstinatesores etc., Price per phial Rs. 1-12-0.

2. "Amirtha-Tonic" An infallible cure for, Syphilis in all its stages, loss of flesh and strength, Debility and Poverty of the blood, General impurity of the blood, All skin diseases, Nervous prostration and loss of memory,

**K. Jagadisan & Co.** Triplicane, Madras,

Chronic constipation, Depression of the spirits, Torpidity of the liver, Weakness during convalescence, Acute or chronic gonorhœa, Gleet, Involuntary emission and want of natural desire etc., Per 8 oz. bottle Rs. 1-12-0.

3. "Ringworm cure" A miraculous cure for ringworm and kindred eruptions. Per phial As. 0-6-0.

4. "Ear drops" A safe remedy for earache and all diseases of the ear. Per bottle As. 10.

5. "Lalana Vilas" Hair oil. A medicated and sweetscented Braincooler. Per bottle Re. 1-0-0.

6. "Athri's Dentrifice" This contains no chalk. The Chief ingredients are medicinal herbs and barks. The use of this powder will

make the teeth pearl like. Being antiseptic it prevents the inroads of caries and tooth ache. It strengthens the gums and adds a delightful odour to the mouth.

(7) "Best Omum Water." A house hold requisite for all stomach disorder. A boon to children. All must use, Strong and Pure. Per Bottle of 12 ounces as 4.

Our Big wall calendars for 1922 with "Lakshmi" or "Saraswati" painted in art colours. Size 20" × 10". As 10. Picture alone costs 10 As.

Agents wanted. Liberal terms for trade. Apply for particulars with 2 As. stamps.

---

The cheapest house in Madras for all Fountain pens, School Exercise, Graph,

Drawing etc., Books, Bound note books, students' requisites, Writing papers, Pen-holders, Pencils, Penknives, Nibs, erasers, blotters, Mathematical instruments, Fountain Pen Inks, Writing fluids, Letter Papers, covers, Letter pads, Blotting pads, Krementz one piece Buttons, Hair oils, soaps, Perfumes Kropp Razors etc. is

**K. Jagadisan & Co. Triplicane.**

**Best German Clinical Thermometers** (½ minute magnifying). Per dozen Rs. 14; 6 at a time Rs. 7-8-0 ; 3 at a time Rs. 4 ; each Rs. 1-8-0. **Zeal English ½ minute Thermometers** Per doz Rs. 33 ; 6 at a time Rs. 17 ;3 at a time Rs 9; each Rs. 3-4-0.

**K. Jagadisan & Co. Triplicane.**

The above medicines will be had from our agent.

**R. Venkatramulu Naidu,**
**41, Kalla Street.**
**Kothaval Chavadi,**
**Trichy.**

# அத்திரியின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

குணமில்லாவிடில் விலையை வாப்ஸ்

செய்யப்படும்.

இம்மருந்துகள் கல்குத்தாவில் டாக்டர் குப்தாவால் தயாரிக்கப்பட்டன.

(1) "அற்புதமெழுகு" எவ்வகை மூலம், சொறிகள், பௌந்தரம், கட்டிகள், மேகப்பத்துகள், கெட்டசீக்கினல் உண்டான புண்கள், ரணங்கள் வகையறாவை ஆப்ரேஷன் இல்லாமலே ஸ்வஸ்தமாக்கும், புட்டி 1-க்கு விலை ரூ. 1-12-0.

---

**K. Jagadisan & Co**. Triplicane, Madras.

(2) "அமிர்த டானிக்" ஆண், பெண், வாலிபர், வயோதிகர் யாவரும் உபயோகிக்கலாம், இரத்தக்குறைவு, அசுத்த ரத்தம், பலகீனம், கை கால் அசதி, தேகமெலிவு, நீர்த்தாரை, எரிச்சல், தாது புஷ்டிக்குறைவு, அஜீரணம், மலச்சிக்கல், பித்தகுன்மம், பித்தவாயு, நியாபக சக்தியின்மை, முதலிய வியாதிகளை கண்டித்து, நரம்புகளுக்கு வலுவை கொடுத்து, தாது புஷ்டியளித்து இரத்த விர்த்தியையுண்டாகும் 8 அவுன்ஸ் பெரிய புட்டி 1-க்கு ரூ. 1-12-0.

(3) "படைஸம்ஹாரி" எவ்வகை படைகள், அரைகடிகள், சொறிகள், படர்தாமரை, முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு விலை அணா 6.

(4) "காது தைலம்" காதுவலி, குத்து, சீழ்வருதல், காதடைப்பு முதலியவைகளை கண்டிக்கும். புட்டி 1-க்கு அணா 10.

(5) "லலனவிலாஸ்" ஹேராயில். மூளைக்கொதிப்பை யடக்கி குளிர்ச்சி செய்து தலை முடிக்கும் அழகு அளிக்கும் ஆனந்தவாஸனையுள்ளது புட்டி 1-க்கு விலை ரூ. 1-0-0.

(6) 'அத்ரி பல்பொடி' சாக்கட்டி இதில் சேர்க்கப் படவில்லை. மருந்து மூலிகைகளும் கருவேலம் பட்டை, கலநார்,

முதலிய மருந்து சரக்குகளுமே உபயோகிக்கப் பட்டுள்ளது. இதை உபயோகித்தால் பல் வெளுப்பாவதுடன், வாய் நாற்றம், பல் வலி, ரத்தம் வருதல், முதலியவைகளை நிறுத்தி பல்லுக்கு பலத்தை யுண்டாக்கும். டப்பி 1 க்கு அணு 3.

(7) 'உயர்ந்த ஓமவாட்டர்' வெகு ஜாக்கிரதையுடன் சுத்தமாயும் காட்டமாயும் செய்யப்பட்டது. வயிறு உப்பிசம், அஜீரணம், மலப்போக்கு முதலியவைகளுக்கும் கைக்குழந்தை, சிறுவர் சிறுமிகளுக்கு கை கண்டது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியமாய் இருக்கவேண்டியது. விலை 12 அவுன்ஸ் புட்டிக்கு அணு 4.

ஏஜண்டுகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் நகரங்களிலும் தேவை. இரண்டணு ஸ்டாம்பு அனுப்பி விபரம் தெரிந்து கொள்ளவும்.

1922-ம் வருஷத்திய சித்திரத்துடன் கூடிய காலெண்டர். 'லக்ஷிமி' அல்லது 'ஸரஸ்வதி' படம் போட்டது. 20 அங்குலம் நீளம் 10 அங்குலம் அகலம். விலை அணு 10. படம் மட்டுமே அணு 10பெறும்.

தர்மாமிட்டர்கள் ஜர்மன் ½ நிமிஷம், பெரிதாய்க் காட்டும் வகை. ஒரு தடவைக்கு 12 வீதம் எடுத்தால் ரூ. 14; 6 வீதம் ரூ. 7-8-0; 3 வீதம் ரூ. 4; ஒன்றுக்கு ரூ. 1-8-0.

---

ஸீல் இங்கிலீஷ் $\frac{1}{2}$ நிமிஷம் தர்மாமிட்டர்கள் ஒரு தடவைக்கு 12 வீதம் ரூ. 33; 6வீதம் ரூ. 17; 3 வீதம் ரூ. 9; ஒன்றுக்கு ரூ. 3-4.0.

சகல பௌண்டென் பேனுக்கள், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய எக்ஸர்ஸைஸ் புத்தகங்கள், கிராப் நோட்டுகள், டிராயிங் நோட்டுகள், காய்தம், பென்சில், பேனு, நிப்புகள், கணக்கு கருவிகள், கலர்க்குச்சிகள், ரப்பர்கள், பௌண்டு பேனுஇங்கிகள், இங்கிமாத்திரைகள், லெட்டர் பேபர், ரப்பர் ஸ்டாம்புகள், வெள்ளி கிளிப்புகள், கிராப் கத்திகள், ஹோராயில், ஸோப்புகள், முதலியவைகள் விலை ஸாஸமாய் விற்கிறோம்.

வியாபாரிகளுக்கு மொத்தமாயும் கொடுக்கிறோம். வேண்டியவைகளின் விலையை எழுதிக் கேட்கக் கோருகிறோம்.

**K.** ஜகதீசன் கம்பேனி,
திருவல்லிக்கேணி,
சென்னை.

மேற்கண்ட மருந்துகள் எங்கள் ஏஜண்டான அடியிற் கண்டவரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

**R.** வேங்கட்டருமலு நாயுடு,
**41**, கள்ள தெரு,
கோத்தவால்சாவடி, திருசசி.

# SOLAAQUIN.

**An invaluable Specific for Asthma**

Most efficacious in all Catarrhal affections of the lungs, Trachea, Bronchial Tubes and pain in the Chest.

Prepared by the Kalpaka Medical Bureau Price Rs. 2 for a Box of 32 Pills.

**Sole agents for Tanjore, Trichy and Madura Dts:**

**K. JAGADISAN & Co. Triplicane, Madras.**

---

இழுப்பு நோய்க்கு கைகண்ட ஔஷதம்:

“ ஸோலாக்யின் ”

கல்பக வைத்திய சாலையில் தயாரிக்கப்பட்டது.

இருமல், இழுப்பு நோய், காசம், மார்ச்சளி முதலிய வியாதிகளை கண்டிக்கும்.

தஞ்சை, திருச்சி, மதுரை ஜில்லாக்களுக்கு ஏஜண்டு

**K.** ஜகதீசன் கம்பேனி, திருவல்லிக்கேணி.

எங்கள் திருச்சி சப் ஏஜண்டு.

**R.** வேங்கட்டராமுலு நாயுடு,

**41,** கள்ளர் தெரு கோத்தவால் சாவடி, திருச்சி.

# IF YOU WANT

to get anything in

**Printing, Publishing, Book binding, Ruling, Stamp making, Engraving**

lines, Kindly have themin

## THIRUPURASUNDARI & Co.

# NOBLE PRESS

***Printers, Publishers, Book Binders, Rulers, Rubber Stamp makers, Engravers,***

***etc., etc., etc.,***

Our Ærated Water

Lables Printing---a Speciality

*Address :*

*1-21 Khanabagh Street.*

*Triplicane, Madras.*

# Nicolai Lenin : [As. 12

## His Life and Work

In English

**The Verdict of History.**

*"Two mighty men of action there be -day, Lenin and Gandhi, Lenin an ascetic the throne of Russia—Lenin an Idealist— a Practical Reformer—in an epoch of religious faith. Lenin would have been uttered in Europe as a saint: in both Lenin and Gandhi is the faith of the Idealist."*

*Prof. Vaswani.*

---

**Report of the Joint Committee of the Dravida Vaidiya Mandal and the Madras Ayurveda Sabha.**

In reply to The Report on the investigations into Indegenous Drugs by Dr. M. C. Koman, appointed by the Government of Madras.

**Price Re. 1**

**K. Jagadisan and Co.**
**Triplicane, Madras.**

---

S E 259A-6